பக்கங்கள்: பத்து
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 7 வியாழக்கிழமை (19-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 73

# ஜனாதிபதி தலைமையில் யுத்த சபை நாடாளுமன்றத்தில் பிரேரணை!

## போரை துரிதப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, பெப்ரவரி 19

**வடக்கு-கிழக்கில் நடக்கும் யுத்தத்தைத் தீவிரப்படுத்தவும், யுத்தம் தொடர்பான முடிவுகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் வசதியாக ஜனாதிபதி தலைமையில் யுத்தச்சபை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.**

—இது தொடர்பான பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர ஐ. தே. க. எம்.பிக்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் யுத்தத்தை தீவிரமாக்கும் நோக்கில் யுத்த சபை ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் —

அதன் மூலம் சகல கட்சிகளும் இணைந்து முடிவுகளை துரிதமாக எடுத்துச் செயல்பட முடியும் என்றும் — கோரும் பிரேரணை ஒன்றை ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் கசில் முனசிங்க, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) தலைவி சிறிமானி அத்துலத்முதலி ஆகியோர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளனர்.

இந்தச் சபையின் தலைவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப யுத்த சபைப் பிரேரணைக்கு எதிர்ப்பு இருக்காது என்டு சொல்லுறியோ!

## பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் விடுதலை

கொழும்பு, பெப். 19

கடந்த திங்கட்கிழமை கொம்பனித் தெருவில் வைத்து விமானப்படையினரால் கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இராஜேஸ்வரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வருவதற்காக விமான டிக்கெட் பதிவு செய்யச் சென்ற சமயம் கைதான இவர் கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில்

10 ஆம் பக்கம் பார்க்க)

## கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் சிவராத்திரிவிரதம் இருக்க அனுமதி

யாழ்ப்பாணம், பெப். 19

கடந்த எட்டு வருடங்களின் பின்னர் இவ் வருடம் கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கவும்—

கீரிமலைக்கேணியில் நீராடி பிதிர்க்கடன் நிறைவேற்றவும்— அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச இராணுவத் தளபதிக்கும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று நடந்த பேச்சுக்களின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் சிவராத்திரி தினமான - எதிர்வரும் 25 ஆம் திகதி — புதன்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து புறப்படும் பேருந்துகள் மூலம் கீரிமலைக்கு செல்லலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் 4 சாமமும் நடைபெறும் பூசைகளில் பங்குபற்றிய பின்னர் அதிகாலை கேணியில் தீர்த்தமாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிவராத்திரிக்கு மறுநாள் வியாழக்கிழமை கீரிமலையில் தீர்த்தமாடவும், பிதிர்க்கடன் செய்யவும் வருபவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது சாவகச்சேரியில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 19

சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகம் கடந்த திங்கட்கிழமை இரவு 8-30 மணியளவில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அலுவலகத்தை நோக்கிக் கைக்குண்டு ஒன்றை வீசித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக ரூபவாஹினி தெரிவித்தது.

இந்தத் தாக்குதலின் போது சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த பூவும்பொட்டும் என அழைக்கப்படும் பீ. ஜெயராசா (வயது 53) என்பவர் இடையில் சிக்கி காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரியவந்தது. (இ-3-8-117-31)

## அத்தாஸ் மீதான அச்சுறுத்தலை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

### பத்திரிகையாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்

கொழும்பு, பெப். 19

இலங்கையின் மூத்த பத்திரிகையாளரும், இராணுவ ஆய்வாளருமான இக்பால் அத்தாஸ் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கொலை அச்சுறுத்தலைக் கண்டித்தும், அச்சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு அரசாங்கத்தைக் கோரியும் கொழும்பில் பத்திரிகையாளர்கள் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

சுதந்திரப் பத்திரிகையாளர்கள் இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு விட்டன் சதுக்கத்தில் நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரை நடைபெற்றது.

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகள் உட்பட நாட்டில் வெளிவரும் பெரும்பாலான பத்திரிகைகளினது ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பீட உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செட்டிக்குளம் பகுதியில் கிளைமோர் தாக்குதல்!

### 8 படையினர் பலியாகினர்

யாழ்ப்பாணம், பெப். 19

வவுனியா மாவட்டம் செட்டிக்குளத்தில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரின் வாகனம் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணிக்கு மேற்கொண்ட கிளைமோர்த் தாக்குதலில் எட்டுப் படையினர் உயிரிழந்தனர்.

மூன்று படையினர் காயமடைந்த நிலையில் அநுராத

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் நேற்று பதவி ஏற்கவில்லை

யாழ்ப்பாணம், பெப். 19

கடந்த மாதம் 29 ஆம் திகதி நடந்த தேர்தலின் போது யாழ் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்வார்கள் என்று அரசாங்கம் அறிவித்திருந்த போதும் —

எந்தச் சபையின் உறுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. அமைப்பின் பெயரில் மக்கள் விரோதச் செயல்கள்

### தகவல் தருமாறு அக்கட்சி கோருகிறது

யாழ்ப்பாணம், பெப். 19

ஈ.பி.டி.பி.யின் பெயரைப் பாவித்து எவராவது மிரட்டல், பணப்பறிப்பு, சொத்துக்களைச் சூறையாடுதல் போன்ற மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டால் அது பற்றி உடனடியாக எமது கட்சி அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் தரவும். அதன்மூலம் மக்கள் விரோத செயல்களில் ஈடுபடுவோரை இனங்காட்டவும் அம்பலப் படுத்தவும் ஒத்துழைப்புத் தாருங்கள்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. அமைப்பு பொதுமக்களைக் கேட்டிருக்கிறது. இது தொடர்பாக அந்த அமைப்பின் யாழ் மாவட்ட அமைப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

அன்பான மக்களே, கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து யாழ். குடாநாட்டின் மக்களுக்கான சேவையை [illegible] யின ஈ.பி.டி.பி. யினரா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் முகாம்கள் மீது வெல்லாவெளியில் ஷெல் வீச்சு

### இரு அதிரடிப்படையினர் காயம்

மட்டக்களப்பு, பெப். 19

மட்டக்களப்பு வெல்லாவெளி விசேட அதிரடிப்படை முகாம், பொலிஸ் நிலையம் ஆகியவை மீது நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

45 நிமிட நேரம் இடம்பெற்ற இத் தாக்குதலில் 3 ஷெல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமானியின் ஆதரவு எந்தக் கட்சிக்கு?

கொழும்பு, பெப். 19

எதிர்வரும் தேர்தல்களில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் (லலித் பிரிவு) ஆதரவு யாருக்கு?

இது குறித்து தேர்தல்கால சூழ்நிலையைப் பொறுத்தே முடிவு செய்யப்படும் என்று சிறிமானி அத்துலத் முதலி தெரிவித்தார்.

தீர்வுத் திட்டத்துக்கு ஐ. தே. கட்சியின் மாற்று யோசனை குறித்து எமது கட்சி உடனடியாக அபிப்பிராயம் தரமாட்டாது.

மாற்று யோசனை முழுமையாக வெளிவந்த பின்புதான் அபிப்பிராயம் கூறமுடியும்.

அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு நாடு முழுவதும் எதிர்ப்புக் கூட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-21)

## கடற்றொழில் பற்றிய செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். மாவட்டத்தின் கடற்றொழில் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இன்று வியாழன் முதல் மூன்று தினங்களுக்கு "கடற்றொழில் அபிவிருத்திக்கான திட்டங்களை இனம் காணுதல்" என்ற விடயம் தொடர்பான செயலமர்வு ஒன்று கெயர் நிறுவனப் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளும், கடற்றொழில் பரிசோதகர்களும் இச் செயலமர்வில் கலந்து கொள்கின்றனர். (இ-7)

## விலை வீழ்ச்சி

நெல்லியடி, பெப். 19

வலிகாமம்கிழக்கில் மரக்கறி விலை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. (இ-109)

## விளையாட்டு உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 19

விளையாட்டு உத்தியோகத்தர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளது.

இந் நேர்முகப் பரீட்சையில் வெளி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் பங்கு பற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19

கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா வீதியிலுள்ள பொஸ்கோ கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட இருக்கும் சுயாதீனக் குழுவுக்கு மேற்படி சங்கத்தால் நியமனம் செய்யப்பட்டவர்களும் கலந்து கொள்வார்கள்.

கைது செய்யப்பட்ட, காணாமல்போன உறவினர்களின் புகைப்படங்களுடன் சங்க அங்கத்தவர்களை இக் கூட்டத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-5)


## விற்பனைக்கு

வீடியோ புரொஜக்ரர்
(SHARP),
12½ அடி திரையுடன்
(புதியது),
வீடியோ F. M. 2
ஸ்ரில்கமரா
(Black Body Nikkon)
45,000/=,
S.R 30 டெக் 13,000/=
ஆகியவை விற்பனைக்கு உண்டு.

**றீகல் வீடியோ**
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.
(53489)


# மரண அறிவித்தல்கள்

## க. நடேசன்

[ஓய்வுபெற்ற முன்னாள் கணக்காளர்]
(Ceylon Theatres Ltd)

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட க. நடேசன் கொழும்பில் காலமானார்.

அன்னார் ஞானம்மாவின் அன்புக் கணவரும், மகேந்திரனின் அன்புத் தந்தையும், செல்வரதியின் அன்பு மாமனாரும், ஹரிதரன் (London), கோபிதரன், பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஐயா பொன்னுத்துரை (கோப்பாய் வடக்கு), திருமதி இரத்தினம் கதிரவேலு (நவாலி), காலஞ்சென்ற திருமதி பாக்கியம் ஆறுமுகம் (மூளாய்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் அவரது இல்லத்தில் 18-02-98 இல் நடைபெற்று, பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம் (பெறாமகள்)

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
75, 7th Lane, Wall Street,
Colombo - 13.

(53487)

## நாகராசா ஜெயகாந்தன்

வேலணை 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜெயகாந்தன் (ஜெயா) வவுனியாவில் முதிராச்சாவு அடைந்தார்.

இவர் செல்வராணியின் அன்புத் துணைவனும், சுபிசானந்தி, சிந்துரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலணையூர் புகழ்பூத்த வணிகர் காலஞ்சென்ற நாகராசா, சௌந்தரநாயகி (இராசமணி) ஆகியோரின் பாசமிகு மகனும், பேரின்பராணி, லோகராணி, நோர்வே சரவணபவன், பிரான்ஸ் இலட்சுமிகாந்தன், கிருஷ்ணகாந்தன், ஜெயராணி, ஜேர்மன் இராசகாந்தன், ஜெயவாணி ஆகியோரின் அன்பு உடன்பிறப்பும், பாலேந்திரன், ஆனந்தசிவராசா, நோர்வே சித்திரா, பிரான்ஸ் மாலா, நோர்வே இரத்தினையன் ஆகியோரின் ஆசை மைத்துனனும் ஆவார்.

இவரின் இறுதி நிகழ்வுகள் மல்லாவியில் நடைபெற்றன. இதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

தகவல்:

பா. பேரின்பராணி (மூத்த உடன்பிறப்பு)

248, பிறவுண் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/2916)

## பிலிப் அந்தோனிப்பிள்ளை

விதானையார் என அழைக்கப்படும் முன்னாள் மாநகரசபை வேலை மேற்பார்வையாளர் பிலிப் அந்தோனிப்பிள்ளை 16 - 02 - 98 அன்று காலமாகி விட்டார்.

இவர் றெஜினாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற மு பிலிப், மரியை ஆகியோரின் அன்பு மகனும், திலகா, நிகிலா, காலஞ்சென்ற A. C. சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சுகுமாரின் அன்பு மாமனாரும், நிஷான், சுபீஸ்ரன், வனிஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19-02-98) பி.ப. 3 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

பொ. சுகுமார் (மருமகன்)

இல. 1, புது வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

(53486)


எமது புதிய வெளியீடு!

அர்ஜுன் — சிம்ரன் நடித்த
★ கொண்டாட்டம் (ஒறிஜினல்)

எமது ஒறிஜினல் வெளியீடு!

★ சிவா
★ சட்டம் ஒரு இருட்டறை
★ விஸ்வாதி விஸ்வன்
★ தங்கப் பதுமை
★ எதிர் நீச்சல்
★ துலாபாரம்
★ பாகப்பிரிவினை
★ எங்க வீட்டுப் பிள்ளை
★ ராணி சம்யுக்தா
★ நான் ஏன் பிறந்தேன்
★ விவசாயி
★ திருமால் பெருமை
★ பக்த ஹனுமான்
★ திருவருள்
★ தசாவதாரம்
★ அகத்தியர்

வீடியோ CD வெளியீடு!
★ விடுகதை

**வீடியோவிமல்**
யாழ்ப்பாணம்.
(சி/2914)



நெல்லியடி
**மஹாத்மா வெண் திரையில்**
இன்று முதல்
விஜயகாந்த் - மீனா நடித்த
உளவுத்துறை
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)



**விக்னா கல்வி நிறுவனம்**
ACCOUNTING
Mr. Balavasan
COMPANY
Saturday 2 — 3
(53488)



**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்

தியேட்டர் திரை பெரிதாகத் திருத்தி அமைக்க வேண்டியிருப்பதால் வியாழன் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.

வெள்ளி மட்டும்
எம். ஜி. ஆர். நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
10-30, 2-30
(53059)



உ
தேவிமயம்

**வியாபாரிமூலை**
அருள்மிகு
**ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்**
தேவஸ்தானம்
**நவோத்தரசகஸ்ர சங்காபிஷேகம்**

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் மாசித் திங்கள் 7 ஆம் நாள் (19-02-1998) வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளுக்கும் ஸ்ரீசக்கரேஸ்வரிக்கும் பிரதிஷ்டா பெரும் சாந்திவிழா நடைபெற்றதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு மகா சங்காபிஷேகம் நடைபெற அன்னையின் திருவருள் கூடியுள்ளதால் அத்தருணம் அனைவரும் கலந்து அன்னையின் திருவருள் பெற்று உய்வீர்களாக!

சுபமஸ்து.

மகா சங்காபிஷேக பிரதமகுரு:

ஸ்ரீலஸ்ரீ
மகாகணபதி சிவானந்தராஜாக் குருக்கள்
(பிரதம குரு, இம்பர்சிட்டி சித்திவிநாயகர் தேவஸ்தானம், வியாபாரிமூலை)

சர்வசாதகம்:

சிவஸ்ரீ பாலபத்மநாதக் குருக்கள்
(பிரதம குரு, அம்மன் ஆலயம், வெருடாவில்)

சிவஸ்ரீ சிவகுஞ்சிதபாதக் குருக்கள்
(பிரதம குரு, தெணி அம்பாள் தேவஸ்தானம், திருநாவலூர்)

ஆலய பிரதம குருவும்,
நிர்வாகத்தினரும்.

விழா சிறப்புற அன்னையின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போர்.

**(S) றோணியோ**
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
(சி/2913)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் யோகசுந்தரம்**

மறைவு: 20 — 01 — 1998

முத்தான உமை நினைந்து
கண்ணீர் வடிக்கின்றோம்
பித்தாகிப் போனோமே — எமை விட்டு
நீர் பிரிந்து சென்றதனால்
முப்பத்தொரு நாளல்ல முந்நூறு நாள் தான்
சென்றாலும் கவலை தீராதையா!

ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி: சிவபாக்கியம், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொழும்பு. (சி/2915)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொனிக்காவுக்கு கிளின்ரன் அளித்த காதல் பரிசு அம்பலம்?

வஷிங்டன், பெப். 19

கடந்த ஆண்டு காதலர்தினத்தன்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் மொனிக்கா லுவின்ஸ்கிக்கு காதல் பரிசுகளை வழங்கினாரா?

சுதந்திர வழக்கறிஞர் கவுன்ஸிலின் வழக்கறிஞர் கெனத் ஸ்ரார் மேற்கொண்ட புலனாய்வு விவரங்களில் இந்த விடயம் வெளியாகியுள்ளது.

கிளின்ரன் தன்னுடன் வைத்திருந்த பாலியல் உறவு பற்றி மொனிக்கா தனது நண்பியான லிண்டா டிரிப்புக்கு 'ஈமெயில்' கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

லிண்டா டிரிப் அமெரிக்க சட்டசபையில் முன்னர் மொனிக்கா லுவின்ஸ்கியுடன் பணியாற்றியிருந்தார்.

கடந்த ஆண்டு காதலர் தினத்தின் போது அதிபர் கிளின்ரன் தனக்கு அளித்த பரிசு விவரங்கள் பற்றியும் மொனிக்கா ''ஈமெயில்'' கடிதம் மூலம் லிண்டாவுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் வழக்கறிஞர் கெனத் ஸ்ராரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ஆனால் அதிபர் கிளின்ரன் இதனை வன்மையாக மறுத்துள்ளார்.

இந்த இரு பெண்களும் பயன்படுத்திய கணனிகள் புலனாய்வுக்காக கைப்பற்றப்பட்டிருப்பது தெரிந்ததே.

தற்போது கிடைத்துள்ள ''ஈமெயில்'' கடிதம் கிளின்ரன் மீதான குற்றச் சாட்டுக்களுக்கு நல்ல சான்றாக அமையும் என ''நியூஸ் வீக்'' கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# ஐ. நா. செயலாளர் பக்தாத் செல்கின்றார்

## தீர்வுகாண இறுதிச் சந்தர்ப்பம்

வாஷிங்டன், பெப்ரவரி, 19

ஐ. நா. ஆயுத பரிசோதனை விவகாரத்தில் ஈராக்குடன் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைத் தீர்க்கும் முயற்சியாக ஐ. நா. செயலாளர் நாயகம் கோபி அனான் (KOFI ANNAN) நாளை பக்தாத் செல்கிறார்.

இந்த நெருக்கடியில் ஈராக் மீதான அமெரிக்காவின் இராணுவத் தாக்குதலைத் தவிர்க்கும் கடைசி சந்தர்ப்பமாக அவரது விஜயம் அமையும் என அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் இணக்கம் தெரிவித்ததை அடுத்தே ஐ. நா. செயலர் தமது ராஜீகப்பணியில் இறங்கியுள்ளார். வெள்ளிக்கிழமை தான் பக்தாத் போய்ச் சேர்வார் என்று செய்தியாளர்களிடம் கோபி அனான் அறிவித்தார்.

தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை அமைதியாகத் தீர்க்க நியாயமான முறையில் சகல நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும், ஐ. நா. செயலர் திறந்த மனதுடன் பேச்சுக்களில் கலந்து கொள்வார் என பக்தாத் நம்புவதாகவும் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசேயினின் புரட்சிகர கவுன்ஸில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோபி அனானின் முயற்சியை வரவேற்பதாக அமெரிக்கா கூறியுள்ளது. ஆனால் அவரது பயணத்தின் முடிவு ஐ நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானங்களுக்கும் அமெரிக்காவின் தேசிய நலனுக்கும் முரணாக இருந்தால் அதனை ஏற்க மறுக்கும் உரிமை அமெரிக்காவுக்கு உண்டு என்று ஐ நாவுக்கான அமெரிக்கத் தூதர் பில் ரிச்சட்சன் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

அமெரிக்கா வளைகுடாவில் தனது படைப் பலத்தை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

(ஐ)

## இந்தியாவில் பாலியல் ஒளிபரப்பு

புதுடில்லி, பெப். 19

இந்தியாவில் வயது வந்தோருக்கான தொலைக்காட்சி சேவை ஒன்று இவ்வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாலியல் தொடர்பான பேட்டிகள், படங்கள் உட்பட பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இந்த ஒலிபரப்பு அமையும். இந்தியாவில் இத்தகைய சேவை ஒன்று ஆரம்பமாக இருப்பது இதுவே முதல் முறையாகும்.

'பிளஸ்-21' கனல் மூலம் ஒளிபரப்பாகும் இந்தச் சேவையில் தன்னினச் சேர்க்கை தொடர்பான விடயங்களும் இடம் பெறும்.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, இந்தோனேசியா, இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளை உள்ளடக்கியதாக இந்த ஒளிபரப்பு சேவை அமையும்.

## உலக அரங்கில்

# சியராலியோன் தலைநகர் ஆபிரிக்கப் படைகள் வசம்

## புரட்சியாளர்களின் 7 மாத முற்றுகை முறியடிப்பு

பிரீரவுண் பெப். 19

சியராலியோனில் கடந்த ஏழுமாத காலமாக நீடித்த சதிப்புரட்சியாளர்களின் ஆட்சியை நைஜீரியா தலைமையிலான ஆபிரிக்க நாடுகளின் படையினர் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர்.

கடும் சண்டைக்குப் பின்னர் தலைநகர் பிரீரவுண் புரட்சியாளர்களின் பிடியில் இருந்து விடுபட்டுள்ளது.

புரட்சியாளர்களைத் தேடிப் பிடிக்கும் பணியில் ஆபிரிக்கப் படையினர் தற்போது ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரங்களில் இடம் பெற்ற சண்டைகளில் புரட்சியாளர்கள் பலர் கொல்லப்பட்டனர். சில இடங்களில் அவர்கள் தாமாகவே முன்வந்து சரணடைந்தனர்.

புரட்சியாளர்களின் தலைவர்கள் தொடர்ந்தும் தலைமறைவாகவே உள்ளனர். இவர்கள் விரைவில் கண்டுபிடிக்கப்படுவார்கள் என ஆபிரிக்கப் படையினருக்குத் தலைமை வகித்த நைஜீரி இராணுவ ஜெனரல் திமோதி செடில்பிடி தெரிவித்துள்ளார்.

சியராலியோனில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு பதவியில் இருந்த அதிபர் அகமட் தேஜன் கபா கடந்த ஏழுமாத காலத்துக்கு முன்னர் சதிப்புரட்சி மூலம் ஆட்சியில் இருந்து கவிழ்க்கப்பட்டது தெரிந்ததே.

இராஜதந்திர ரீதியான முயற்சிகள் தோல்வி கண்டதால் நைஜீரியா தலைமையிலான ஆபிரிக்க நாடுகளின் படைகள் முன்னாள் அதிபரை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்காக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டன.

(ஐ)

200 உயிர்களைப் பலிகொண்ட

# விமான விபத்தில் தப்பிய குழந்தை யாருடையது?

தாய்வானில் இடம் பெற்ற சீன விமான விபத்தில் அதில் பயணம் செய்த 197 பேரும் கொல்லப்பட்டனர், இந்த விமான விபத்தில் ஒரேயொரு குழந்தை மட்டும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளது. விமானச் சிதைவுகளுக்குள் இருந்து இந்தக் குழந்தையை மீட்புப் பணியாளர்கள் மீட்டனர்.

அந்தக் குழந்தையைப் பற்றிய முழு விவரங்களும் உடனடியாகத் தெரியவரவில்லை. குழந்தை தற்சமயம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

சீன விமான சேவைக்குச் சொந்தமான இந்த ''ஏயர் பஸ் - 300'' ரக விமானம் தாய்ப்பே விமான தளத்தில் தரையிறங்குவதற்கு முன் விபத்துக்குள்ளானது. விமானம் சில வீடுகள் மீது மோதியதில் தரையில் நின்ற 7 பேர் பலியாகினர்.

உயிர் தப்பிய குழந்தை விமானத்தில் இருந்ததா அல்லது தரையில் வீட்டில் இருந்ததா என்பது தெரியாதுள்ளதாக மீட்புப் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

யுனெஸ்கோ நிறுவனம் வழங்கும்

# பத்திரிகை சுதந்தர விருது பெண் பத்திரிகையாளருக்கு

## அவர் நைஜீரிய சிறையில் வாடுகிறார்

நைஜீரியாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்டினா அன்யான்வு என்ற பெண் பத்திரிகையாளருக்கு யுனெஸ்கோ நிறுவனத்தின் பத்திரிகைச் சுதந்திரத்துக்கான உலக விருது வழங்கப்பட்டுள்ளது. இவருக்கான பரிசுத் தொகை 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

கிறிஸ்டினா அன்யான்வு கடந்த மூன்று ஆண்டுகளாக நைஜீரிய சிறையில் மிக மோசமான நிலையில் உள்ளார். அந்த நாட்டில் பத்திரிகைச் சுதந்திரமும், தொடர்புத் துறைச் சுதந்திரமும் முற்றாக மறைந்துவிட்டன என்று இந்தப் பரிசுக்குரியவரைத் தெரிவுசெய்த குழுவின் தலைவர் கூறினார்

(ஐ)

# அமெ. விட்டுக் கொடாது என்கின்றார் கிளின்ரன்

வாஷிங்டன், பெப். 18

ஈராக் மீது இராணுவ நடவடிக்கை மேற் கொள்ள வேண்டாம் என்று அனைத்துலக நெருக்குதல் ஏற்பட்டாலும் அமெரிக்கா மசிந்து கொடுக்காது என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் உறுதிபடக் கூறியுள்ளார்.

ஐ. நா. ஆயுத சோதனையாளர்கள் தங்கள் பணியைப் புரிய அனுமதிக்க வேண்டிய தனது கட்டுப்பாட்டில் இருந்து ஈராக் விலகிக் கொள்ள முற்பட்டால், அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்ய ஆதரவு கிடைக்காத நிலையிலும். அமெரிக்கா தாக்குதல் நடத்துமா என்ற கேள்விக்கு பதில் அளிக்கும் போது, ரஷ்யாவில் நேர்வழி என்பது இல்லை என்று அவர் கூறினார்.

ஆனால் அமெரிக்காவைப் பொறுத்த வரையில் நேர் வழி என்றார் அவர்.

# இந்தோனேசியாவில் கலவரங்கள் நீடிப்பு

இந்தோனேசியாவின் லம்குட் தீவிலும், மேற்குயாவாவிலும் இடம்பெற்ற கலவரங்களில் குறைந்தது 4 பேர் கொல்லப்பட்டனர்.

வர்த்தக நிலையங்கள் நொறுக்கப்பட்டுள்ளன. சீன மக்களின் கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. 4 கிறிஸ்தவ தேவாலயங்களும் தாக்கப்பட்டுள்ளன.

150 பேர் இதுதொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுபான்மையினரான சீனர்கள் அகதிகளாகியுள்ளனர்.

(இ-9)

# மெழுகுதிரி, ஊதுவர்த்தி கொளுத்த கட்டுப்பாடு

## சிங்கப்பூர் அரசு நடவடிக்கை!

சிங்கப்பூர் பெப். 19

பெரிய அளவிலான ஊதுவர்த்திகளையும், மெழுகுதிரிகளையும், கொளுத்துவது சிங்கப்பூரில் கட்டுப்படுத்தப்படவுள்ளது.

சமய நிகழ்வுகளிலும், கொண்டாட்டங்களிலும் அளவில் பெரிய வர்த்திகளை எரிக்கும் பழக்கம் அதிகரித்து வருவதால் சுற்றுச் சூழல் பாதிப்பும், அயலவர்களுக்கு அசௌகரியங்களும் ஏற்படுவதாக சிங்கப்பூர் சுற்றுப்புற அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பாதிப்புக்களைக் கருத்திற் கொண்டு இவற்றைக் கொளுத்துவதற்கு அளவு, வகை என்பன நிர்ணயிக்கப்படும்.

இத்தகைய வர்த்திகளைக் கொளுத்துவதை குறைத்துக் கொள்ளுமாறு சிங்கப்பூரின் இரு பிரதான சமய நிறுவனங்கள் பக்தர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
★ போட்டோ பிரதிகள்
★ லமினேட்டிங் (கவரிடுதல்)
நாடவேண்டிய இடம்:
அருண்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 19

கடந்த ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

உதயன் அலுவலகத்துக்கு கிடைத்த சில பாடசாலைகளின் முக்கிய பெறுபேறுகள் கீழே பிரசுரமாகின்றன.

பழைய பாடத்திட்டத்தின் கீழும், புதிய பாடத்திட்டத்தின் கீழும் மாணவர்கள் பெற்ற சிறந்த பெறுபேறுகள் இவை.

ஒரே பெறுபேற்றை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் அவர்களின் எண்ணிக்கை இலக்கம் பெறுபேற்றுக்கு அருகே அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.

ஏனைய பாடசாலைகளின் பெறுபேறுகள் பின்னர் உதயனில் வெளியாகும்.

### யாழ். இந்து மகளிர்

★ மருத்துவம்:- ப.பா. — 4ஏ, ஏ2பிசி, 4பி, 3பிசி, பு.பா. — ஏ2பிசி, 3பிசி, 2ஏ2சி, பி3சி (2), பி2சிஎஸ்.

★ வர்த்தகம்:- ப.பா. — 2ஏ2பி, ஏ3பி (2), ஏ2பிசி, ஏ2பிஎஸ், 3பிசி பு.பா. — 3எபி, 2ஏ2பி, ஏ2பிசி, ஏபி2சி, 2பி2சி (8).

★ கலை:- ப.பா. — 2ஏ2பி, 2ஏபிசி, 2ஏபி, ஏ3பி (2), ஏ2பிசி, ஏபி2சி (3), 3பி (2) பு.பா. — 3ஏபி, 2ஏபிசி, ஏ3பி(4), ஏ2பிசி(8), எபிசிஎஸ். 4பி, 2பி2சி.

★ கணிதம்:- ப.பா. — பி2சிஎஸ் பு.பா. — சி3எஸ்

### சுண்டிக்குளி மகளிர்

★ மருத்துவம்:- ப.பா. — 2ஏ2பி (2), ஏ3பி, 2பி 2சி (2), பு.பா. — 2ஏ2பி, 4பி (2), 2பி2சி, பி3சி.

★ கணிதம்:- ப.பா. — 2எ 2சி, பு.பா. — 3சிஎஸ்.

★ வர்த்தகம்:- பு.பா. — 2ஏ2பி, ஏ3பி, 3பிசி (3).

★ கலை:- ப.பா. — 2ஏபிசி, 2ஏ2சி, பு.பா. — ஏ2பி எஸ், ஏபி2சி, 3பிசி, 2பி2சி (2).

### சென். ஜோன்ஸ்

★ மருத்துவம்:- ப.பா. — 4ஏ, 3ஏபி, 2ஏ 2பி, 2ஏபிசி, ஏ2பிசி, 4பி, 3பிசி, 2பி2சி பு.பா. — 3பிசி, 2பி2சி, பி2சிஎஸ்.

★ கணிதம்:- ப.பா. — 2ஏ2பி, 2பி2சி (2), பி2சிஎஸ்(2) பு.பா. — 4எ (2), 2ஏ2பி, ஏ2சிபி.

★ வர்த்தகம்:- ப.பா — 3ஏசி, 2ஏ2சி, ஏ2பிசி, ஏபி2சி, 3பிசி பு.பா. — 2ஏபிசி, ஏ2பிஎஸ், ஏசிஎஸ், 2பி2சி.

### யாழ். கன்னியர்மடம்

★ வர்த்தகம்:- ப.பா. — ஏசி2எஸ், 3பிசி, 2பிசிஎஸ் (2), பி2சிஎஸ், ஏ3எஸ், பு.பா.— 2ஏபிசி, பிசி2எஸ், 3சிஎஸ்.

★ கலை:- ப.பா — ஏபிசிஎஸ், பி2சிஎஸ், பு.பா.— 2சிஎஸ்.

### கனகரட்ணம் ம.வி.

★ வர்த்தகம்:- ப.பா.— 2ஏ2பி, 2ஏபிசி, ஏ2பிஎஸ், ஏபிசிஎஸ் (3), 3பிசி, பு.பா.— ஏ3பி (2), ஏ2பிசி (3), ஏபி2சி, ஏபிசிஎஸ், ஏ3சி.

★ கலை:- ப.பா— ஏ2பிசி, 2பி2சி, பு.பா.— ஏ2பிசி, (2) ஏபி2சி (2), ஏபிசிஎஸ், ஏ3சி, ஏ2சிஎஸ்.

★ மருத்துவம்:- பு.பா— பி3சி.

### வேம்படி மகளிர்

★ கணிதம்:- ப.பா. — 3பிஎஸ், பு.பா. — ஏ3பி.

★ மருத்துவம்:- ப.பா. —3ஏபி, ஏ3பி (2), ஏ2பிசி, 3பிசி (8), பு.பா.—3ஏபி (3), 2ஏபிசி, ஏ3பி, ஏ2பிசி, 3பிசி (2).

★ வர்த்தகம்:- ப.பா. — 3ஏசி, 2ஏபிசி, ஏ3பி, ஏ2பிஎஸ் (2), ஏபி2சி, பு.பா. — 3ஏபி, 2ஏ2பி (2) ஏ3பி(2)

★ கலை:- ப.பா — 2ஏசிஎஸ், 2பி2சி, பி3சி (2), பு.பா. — 3ஏபி, 2ஏ2பி, ஏபி2சி, 3பிசி (4), 2பி2சி(7).

### திருக்குடும்ப கன்னியர் மடம்

★ மருத்துவம்:- ப.பா.— 3பிசி, 2பி2சி (2), பி3சி, பு.பா, — 3பிசி, 2பி2சி பிசி2எஸ் (2).

★ வர்த்தகம்:- ப.பா.— 3எபி, எ2பிசி, எ2பிஎஸ், எபிசிஎஸ், 2பி2சி, பு.பா.— 3எபி, 4பி (2).

★ கலை:- ப.பா — 2எபிசி, எபி2சி (2), எ3சி, எ2சிஎஸ், 3பிஎஸ், 2பிசிஎஸ், 2சி2எஸ், பு.பா. — எ3பி, எ2சிஎஸ், 3பிசி.

### யாழ், மத்திய கல்லூரி

★ கணிதம்:- ப.பா. — 2எபிசி, பு.பா — 2எபிசி, எ3பி.

★ மருத்துவம்:- ப.பா — எ2பி2சி, எபி2சி, 4பி, 3பிசி, பு.பா. — பிஎஸ்.

★ வர்த்தகம்:- ப.பா.— 4எ, 3எபி, பு.பா.—2எபிசி.

★ கலை:- எ2பிசி (2)

# விஞ்ஞானி ஆதர் சி கிளார்க் மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை

கொழும்பு, பெப். 19

புகழ்பெற்ற விஞ்ஞான கற்பனை எழுத்தாளர் ஆதர். சீ. கிளார்க் மீது சிலவெகுஜனத் தொடர்பு சாதனங்களினால் சுமத்தப்பட்டுள்ள இருவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும்படி ஜனாதிபதி செயலணி கேட்டுள்ளது.

விரைவில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொலீஸார் கேட்கப்பட்டுள்ளனர் என்று சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் அங்கத்தவர் மொறின் செனவிரட்ண தெரிவித்தார்.

(ஐ-8)

## பயணப் பையைப் பறித்த மூவர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம் பெப். 19

கோப்பாய்ப் பகுதியில் ஒருவரைக் காயப்படுத்தி அவரிடமிருந்த பணம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பயணப்பையைப் பறித்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிமன்ற பதில் நீதிவான் க. கேசவன் உத்தரவிட்டார்.

கடந்த 11ஆம் திகதி கோப்பாயில் வைத்து கந்தையா பரமானந்தம் என்பவரைக் காயப்படுத்தி அவரிடமிருந்த 2 ஆயிரத்து 289 ரூபா உட்பட ஆவணங்கள் கொண்ட பயணப் பையைப் பறித்துச் சென்றதாக சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இராசதுரை இராசகுலேந்திரம், சாந்தலிங்கம் செல்வரூபன், சாந்தலிங்கம் செல்வகுமார் ஆகியோரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-5)

## வல்லைப் பாலம்

நெல்லியடி, பெப். 19

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள வல்லைப் பாலம் நீண்ட காலமாக படுமோசமான நிலையில் இருந்து வருகிறது.

(ஐ-109)


உ

விராட் விஸ்வப்பிரம்மனே நம

## பூப்புனித மங்கள நீராட்டு விழா அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருடம் மாசித்திங்கள் 9ஆம் நாள் (21-02-98) சனிக்கிழமை முற்பகல் 11-15 முதல் 11-55 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
★ தர்ஷிகா ★
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பால் அறுகு வைத்தல் காலை 7.35 முதல் 7.55 வரை

தங்கள் நல்வரவை விரும்பும்
திரு. அ. வரதராஜா (அழகு) வும்,
துணைவி யசோதாதேவியும்.

645, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நயினாதீவு
ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்
புலமைப் பரிசில் பரீட்சை — 1997

செல்வி சண்முகநாதன் நிமலவாசுகி 96
செல்வன் உதயபாரதிலிங்கம் நாகருபன் 93

ஆகிய மாணவர்களையும் வெட்டுப் புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் மேற்படி மாணவர்களைக் கற்பித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
பழைய மாணவர் சங்கம்.

(53480)

## போரூட் அனுசரணையுடன் இயங்கும் வெளிவாரி பட்டப் படிப்பு அலகு

போரூட், தம்பசிட்டி.

யாழ். பல்கலைக் கழகத்தின் புதிய கல்வி ஆண்டுக்கான G.A. Q, First in Com. வகுப்புக்கள் எதிர் வரும் 28 - 02 - 98 அன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

New B A Part I
B A Part I
B Com. Part I
B A Part II
B Com. Part III

ஆகிய வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.

(53481) - நிர்வாகம்

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



★ பத்மநாதன் சுயானா ★

புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதியைச் சேர்ந்த
பத்மநாதன் சரோஜினிதேவி தம்பதிகளின்
செல்வப் புதல்வி சுயானா

தனது முதலாவது பிறந்த தினத்தை 19 - 02 - 98 வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

சுயாக்குட்டியை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மணியம் பெரியப்பா குடும்பத்தினர், வன்னியில் இருக்கும் அன்னபாக்கியம் அத்தை குடும்பத்தினர், கச்சாய் அத்தை குடும்பத்தினர், தெய்வேந்திரம் மாமா குடும்பத்தினர், கச்சாய் செல்வரெட்டினர் பெரியப்பா குடும்பத்தினர், சரசாலை பொன்னம்பலம் தாத்தா குடும்பம், சுசீலா மச்சாள், மச்சான்மார், நித்தி குடும்பம், நித்தி, தவம், மகான் குடும்பத்தினர், நாகேந்திரம் மாமா, மற்றும் கவிதா, வாணி, சின்னம்மா, இரத்தினம், தங்கம், மனி குடும்பம், கைதடி மகேந்திரம் குடும்பம், சுண்டிக்குளி பத்மநாதன் குடும்பம், அண்ணாமார், உற்றார், உறவினர்கள் அனைவரும் நீடூழி காலம் பல்கலையும் பெற்று வாழ தம்பனை சித்திவிநாயகர் அருள் புரிய வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
சி. பாலசுப்பிரமணியம்
குமாரசுவாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(சி/2912)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தற்கொலையாளியான பெண் சாந்திஎன்றபெயரில்உலவினார்

கொழும்பு, பெப். 19

கொழும்பு கொம்பனி வீதி குண்டுவெடிப்புச் சம்பவத்தில் தொடர்புடைய தற்கொலைப்படைப் பெண் இந்திராணி கணேசன் என்பவர் சாந்தி என்ற பெயரில் ஏழு மாதங்களாக கடுவெலவில் தங்கியிருந்தார் என ''லங்காதீப'' நாளிதழ் தெரிவித்துள்ளது.

கடுவெலவில் ஒரு தமிழ்க்குடும்பத்துடன் தங்கியிருந்த போது அவர் கர்ப்பவதியாக இருந்தார் எனவும் குழந்தை பிறந்து இருவாரங்களுக்குப் பின்னர் கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து எவரிடமும் கூறாமல் அந்த வீட்டை விட்டுச் சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைப்படைப் போராளியின் புகைப்படம் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் வெளியானதைத் தொடர்ந்து கடுவெல பகுதி மக்கள் சாந்தி என்ற பெயரில் அப்பெண் அப்பகுதியில் உள்ள வீடொன்றில் வசித்து வந்ததாகப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளனர்.

அந்தப் பெண் தங்கியிருந்த வீடு பள்ளத்தில் அமைந்திருந்ததால் களனி கங்கையில் நீர் மட்டம் அதிகரிக்கும்போது அப்பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்படும் போது அந்த வீடும் வெள்ளத்தால் பாதிப்படையும் எனவும் அதற்காக வெள்ள நிவாரணமும் அவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

# மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்க

## கல்வி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, பெப். 19

மரணதண்டனையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று கல்வி உயர் கல்வியமைச்சர் றிச்சர்ட் பத்திரன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மக்கள் இன்று கொலை செய்யப்பயப் படுவதில்லை. இதற்கு கெப்பிற்றிக்கொலவையில் அண்மையில் இடம்பெற்ற கொலைகள் சிறந்த உதாரணமாகும்.

கொலை செய்தவர்கள் சில வருடங்கள் சிறைவாசம் அனுபவித்த பின்னர் மீண்டும் சமூகத்திற்கு வந்து விடுகிறார்கள். இதனால் கொலை பற்றிய பயம் மக்கள் மத்தியில் அருகி வருகின்றது.

பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் போதைப்பொருள் பாவிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களே இதற்குக் காரணம். இத்தகைய நபர்களுக்குக்கூட மரணதண்டனை விதிக்கப்படவேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-8)

### தலைமைப்பீடத்தின் கட்டளையை நிறைவேற்ற

# ஆறு தற்கொலைப் படையினர் தயார் நிலையில் உள்ளனராம்

கொழும்பு, பெப். 19

கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமில் தலைமைப் பீடத்தின் கட்டளையை எதிர்பார்த்து தாக்குதல் திட்டத்தை நிறைவேற்ற ஆறு தற்கொலைப்படைப் போராளிகள் தயார் நிலையில் உள்ளனர் என பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ள சின்னவன் என்ற புலி உறுப்பினர் தெரிவித்துள்ளார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டுடன் மின்மாற்றியை தகர்க்கும் நோக்கில் சென்று கொண்டிருந்த போது சின்னவன் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்கட்டிச்சோலையில் தயார் நிலையில் உள்ள தற்கொலைப்படைப் போராளிகள் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஏற்கனவே இராப்போசன விருந்தில் கலந்துள்ளனர் எனவும் தலைமைப் பீடத்தின் கட்டளை கிடைத்ததும் அடுத்த சில தினங்களில் ஏதாவது பகுதியில் அவர்கள் தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் எனவும் கைதாகியுள்ள சின்னவன் தெரிவித்ததாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(ஐ-10)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பி. ப. 2 மணிக்கு யாழ். அரச அதிபர் தலைமையில் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீவிர உணவு உற்பத்தித் திட்டம், உருளைக்கிழங்குச் செய்கை, உள்ளீடுகள், கால்நடை அபிவிருத்தி, தென்னை அபிவிருத்தி, வீட்டுத் தோட்டம், பழமரச் செய்கை, உகை உணவுத் திட்டம், சந்தைப் படுத்தல் வசதி உட்பட பல விடயங்கள் பற்றி ஆராயப் படும்.

[ஐ-5]

## பொலீஸ்மா அதிபருக்கு பதிலாகக் கடமை

கொழும்பு, பெப். 19

பதில் பொலீஸ்மா அதிபராக தற்போது நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள மூத்த பிரதிப் பொலீஸ்மா அதிபர் கலாநிதி தர்மதாச சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலீஸ்மா அதிபர் டபிள்யு. பி. ராஜகுரு அவுஸ்திரேலியாவில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றுள்ளார்.

(ஐ-10)

## முதியோர் இல்ல ஆலோசனைக் கூட்டம்

கொழும்புத்துறை, பெப். 19

யாழ். கைதடி அரசினர் முதியோர் இல்லத்தின் ஆலோசனைச் சபைக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெறும்.

(ஐ-30)

# அரசின் திட்டங்களை விளக்கும் கூட்டங்கள்

கொழும்பு, பெப். 19

நாட்டில் தற்போதுள்ள நிலைமை மற்றும் அரசு முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் குறித்து நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிப்பதற்கு அரசாங்கம் நாடெங்கும் விளக்கக் கூட்டங்களை நடத்துவது எனத் தீர்மானித்துள்ளது.

இவ்வாறான கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் இம் மாதம் 27 ஆம்திகதி ஜனாதிபதி தலைமையில் கண்டியில் நடைபெறவுள்ளது.

இதே நேரம் திறம்படச் செயற்படாத கட்சி அமைப்பாளர்களை நீக்கி புதிய அமைப்பாளர்களை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ஐ-10)

# மக்களின் சமகாலப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நிலையங்களாக ஆலயங்கள் விளங்க வேண்டும்

## மகளிர் இல்ல ஆண்டு விழாவில் வலியுறுத்து

வலிகாமம் தெற்கு, பெப்.

சைவ ஆலயங்கள் வெறும் வழிபாட்டு நிலையங்களாக அமையாது சமகாலப் பிரச்சினைகளை அணுகி தீர்வு காணக் கூடியவையாகவும் விளங்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறைத் தலைவர் வைத்திய கலாநிதி ந. சிவராஜா மேற்கண்டவாறு கூறினார்.

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 16 ஆம் ஆண்டு நிறைவு விழா மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி சிவராஜா தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் இன்று பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியன நிறைவேறாது இருக்கும்போது சமயப் பணிகளிலோ சமயசிந்தனைகளிலோ அவர்கள் ஈடுபடுவர் என்று எதிர்பார்க்க முடியாது. அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் சமயங்களுடன் அவர்கள் இணைந்து கொள்கின்றனர்.

சைவசமய மக்கள் மதம் மாறாதிருக்க வேண்டுமானால் அவர்களின் சமகால அடிப்படைப் பிரச்சினைகளை சைவசமய நிறுவனங்கள் தானே முகம் கொடுத்துத் தீர்க்க வேண்டும்.

பல ஆலயங்களுக்கு கிடைக்கும் நன்கொடைகளை நிர்வாகத்தினர் ஆலய திருப்பணிகளுக்கு மட்டுமே செலவிடுகின்றனர். துர்க்காபுர நிர்வாகிகள் சமூக அபிவிருத்திக்கென அதிகளவு நிதியை ஒதுக்கி செயற்படுவது அவர்களின் தீர்க்க தரிசனத்துக்கு எடுத்துக் காட்டு என்றார்–

ஆறு திருமுருகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

### அமைப்பு ரீதியான நிர்வாகம்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:-

இன்று எமது பிரதேசத்தில் ஒவ்வொரு சைவ ஆலயமும் தனித்தனியாக இயங்கும் துர்ப்பாக்கிய நிலையில் உள்ளன. கிறிஸ்தவ சமயம் போன்ற ஓர் அமைப்பு ரீதியான நிர்வாகம் இல்லாதிருக்கிறது. எதிர்காலத்தில் இவை சீர் செய்யப்பட வேண்டும் என்பது எனது பேரவா. இதனை நிறைவேற்ற ஆலய அறங்காவலர்களும் அர்ச்சகர்களும் முன்வர வேண்டும்.

1982 இல் ஆரம்பித்த துர்க்காபுர மகளிர் இல்ல பணிகள், ஆலயத்தின் அமைதி, நிதியினை நல்லபடி பகிர்ந்து செலவிடும் முறை, வைபவங்களை அடக்கமாக மேற்கொள்ளும் பண்பு ஆகியன ஆலய அறங்காவலர், அந்தணர்களுடன் இணைந்து நடைபெற்று வருகின்றன. இவை காரணமாக எமக்கு கிடைக்கும் நிதி மீதமாக உள்ளது. எனவே எவரையும் எதிர்பாராமல் 30 இலட்சம் ரூபா செலவில் 1997இல் மகாகும்பாபிஷேகத்தை நடத்தி முடித்தோம்.

எமது அறப்பணிகளையும், ஏழைகளுக்காக மேற்கொள்ளும் வேலைகளையும் உணர்ந்த திருடர்கள் கூட தமது தவறை உணர்ந்து கோயிலில் திருடிய நகைகளையும், பொருட்களையும் மீண்டும்கோயிலில்சேர்ப்பித்தனர்.

மகளிர் இல்லத்தை 1982 இல் ஆரம்பித்த போது 9 பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் நான்குபேர் இன்னமும் எமது இல்லத்தில் தங்கிப் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்கு நாம் மதிப்பும் கௌரவமும் கொடுக்கின்றோம்.

1985 இல் கோவிலில் நடைபெற்ற கொள்ளை, 1987 இல் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு 1982 இல் ஷெல் தாக்கம், 1995 இல் யாழ்ப்பாண இடப்பெயர்வு எனப் பல சோதனைகள் ஏற்பட்ட போதிலும் எமது உடல் தளர்வு ஏற்பட்டதே தவிர நாம் மனம் தளரவில்லை. இடப்பெயர்வுடன் பல தர்மஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் குறைந்து விட்ட போதிலும் எமது செயற்பாடுகள் எதுவும் குறையவில்லை.

எமது பிரதேசத்தில் சமயத்துக்கு உறுதுணையாக இருந்த பெரியோர்களை நாம் என்றும் வாழ்த்த வேண்டும். போற்றி நினைவு கூர வேண்டும். சமயமும் தமிழும் பண்பாடும் வளர வேண்டுமென்ற நோக்கோடு சேர். பொன் இராமநாதன், இராமநாதன் கல்லூரியை நிறுவினார். இது ஒரு புண்ணிய பூமி. இங்கு நாம் வந்த பின் எமது பிள்ளைகள் பெற்ற பெருமைகள் பல, கோட்டம், மாவட்டம், மாகாணம் என்ற நிலைகளில் பங்கு பற்றி பரிசுகளைப் பெற்று பெருமையடைந்துள்ளார்கள் எமது பிள்ளைகள். அவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக ஒழுக்கமுடையவராக, சமயக் கல்வியைப் பேணி, பெரியோர்களை மதித்து நல்ல பண்போடு வாழ்கின்றனர். இதுபோன்ற அமைப்புகள் ஏனைய இடங்களிலும் ஏற்பட வேண்டும்.

எமது நாடு, இனம் இன்னமும் சீராகவில்லை. சீரான நிலை ஏற்பட்டு கல்வி நிறுவனங்கள், மக்கள் யாவரும் சுத்தம் இடங்களுக்குச் சென்ற பின் நாமும் மீண்டும் எமது துர்க்காபுரம் செல்வோம்—என்றுதெரிவித்தார்.

### ஆதீனங்கள் போன்றது சேவைகள்

வாழ்த்துரை வழங்கிய உடுவில் கோட்டக்கல்விக் அதிகாரி அ. தர்மராஜன் கூறியதாவது:-

யாழ். சைவாபிவிருத்திச் சங்கம் பல ஏழைப் பிள்ளைகளுக்கு நீண்ட காலம் உதவி வந்த போதும் இன்று சற்று நலிவுற்ற வேளையில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் இந்திய சமய ஆதீனங்களின் தொண்டை ஒட்டிய பணிகளை ஆற்றி வருகிறது.

சமுதாயத்தை நல்ல வழியில் வாழவைத்தால் சமயமும் தமிழும் தானே வளரும் என்பதை அறிந்து சமயப்பணிகளுடன் சமுதாயப்பணியையும் இந்நிலையம் செய்து வருகின்றது. வாழ்க்கைக்கு வேண்டிய அத்தனை முறைகளையும் இங்குள்ள பிள்ளைகள் தெரிந்து கொண்டு யாவராலும் போற்றக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்கி வருகின்றனர் — என்றார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் தமது வாழ்த்துரையில்.

முன்பு கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாகவும், அறச்சாலைகளாயும், மிருகங்களைக் காத்து வளர்க்கும் நிலையங்களாகவும் விளங்கின. அவை எல்லாம் இப்போது அருகிவிட்டன. பண்டைய நெறியில் நின்று இந்த மண்ணில் பெண்பிள்ளைகள் தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து வாழக் கூடிய முறையில் மகளிர் இல்லம் விளங்குகிறது. நிர்க்கதியற்றவர்கள், தாய்தந்தையற்ற பெண் பிள்ளைகள் போன்றோருக்கு கைகொடுக்கும்நிறுவனம்இது. உணவு, உடை, உறைவிடம், கல்வி, பண்பாடு போன்றவற்றை வழங்குகின்றனர். சேர். பொன். இராமநாதனின் புனிதமான எண்ணங்களை துர்க்காபுர மகளிர் இல்லத்தினர் நிறைவேற்றி வருகின்றனர். அன்னை திரேசாவைப் போற்றுவது போல அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியையும் அவரின் அறப்பணி நிறுவனத்தையும் சைவத்தமிழ் உலகம் என்றும் போற்றி நினைவில் கொள்ளும்—என்றார்.

திருமதி மனையரசி சிவராசா பரிசுகளை வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகளாக சிறுவர் அபிநயப்பாடல், குழு நடனம், நாட்டிய நாடகம் என்பன இடம்பெற்றன.

(அ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அச்சாய் வீதி, சாவகச்சேரி எட்வேட்ராசா வசந்தரூபன் என்பவரது 091044168 இலக்க விசேட அடையாள அட்டைகூழாவடிக்கும், மானிப்பாய் சந்தைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் அந்தோனியார் ஆலய குருவிடம் ஒப்படைக்கவும்.
[53479]

கைலாயபிள்ளை வாகினி, சரசாலை தெற்கு ஆகிய எனது விசேட அடையாள அட்டை 10-2-98 இல் சாவகச்சேரி நவீன சந்தைக்கும், மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், ரஞ்சனாஸ் புடைவை நிலையம், நவீனசந்தை, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [53458]

சண்முகம் சசீந்திரன் ஆகிய எனது கறுப்பு நிற கம்பஸ் பாக் (Bag) நேர்முகப்பரீட்சைக்குத் தேவையான ஆவணங்கள் அனைத்துடன் ஆரிய குளம் சந்திக்கும், யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இடைக்குறிச்சி, வரணி என்ற விலாசத்திற்கு ஆவணங்களை அனுப்பியோ அல்லது தொடர்போ கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
[53461]

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள YAMAHA 100 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு நேரில் பார்வையிடலாம். விலையையும் பேசித்தீர்மானிக்கலாம். தொடர்பு: வே. ந. துரைராசா, 86, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (விக்னேஸ்வரா அச்சகத்துக்கு அருகில்)
[53462]

### திருத்த வேண்டுமா?

சகல ரி. வி. நிழச்சிகளையும் தெளிவாகப் பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி கொள்ளவும், ரி. வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும் வீனஸ் தனபாலசிங்கம் Diploma In Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம்.
(சி/2843)

### தவறிவிட்டது

சுழிபுரத்தைச் சேர்ந்த பத்மநாபசர்மா சைலஜா என்பவரது 737492354V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, 0904014034 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை என்பன 16-02-1998 அன்று யாழ். நவீன்சந்தையிலுள்ள கடையொன்றில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 22, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [53472]

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்தநாகலிங்கம்தவநாதன் என்பவரது 43190293V இலக்க தேசிய அடையாள அட்டை, விசேடஅடையாள அட்டை என்பன துர்க்கையம்மன் கோயிலுக்கும், கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலில் ஒப்படைக்கவும்.
[53470]

# வழிபாட்டுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், பெப் 19

மாவிட்டபுரம் பிள்ளையார் கோயில், சிவன்கோயில் ஆகியவற்றிற்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சென்று வழிபாடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கோயில்களுக்கு சதுர்த்தி, மகா சிவராத்திரி போன்ற தினங்களில் வழிபடச் செல்ல விரும்புவோர் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்தில் அறங்காவலர் சு. சிவஷண்முகானந்தக் குருக்களைச்சந்திக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது [ஐ-5]

## செயலகத்தில் மிதிவெடி

யாழ். செயலகத்தில் தண்ணீர்த் தாங்கி பகுதியில் அதன் ஏணிப் படியின் கீழ்ப் பகுதியிலிருந்து "ஜொனி" மிதிவெடி ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.
[ஐ-7]

# MATRIMONIAL ACKNOWLEDGEMENT

**MOHAN AND NIMALINI**
**TOGETHER WITH THEIR PARENTS**

Thank all Friends and Relatives, who attended their Wedding service and Reception, sent Congratulatory messages and gave Gifts. They regret their Inability to thank them Individually.

(C/2903

## யா / புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்கம்
## அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு

மேற்படி சீட்டிழுப்பானது எதிர்வரும் **22-02-98** ஞாயிற்றுக்கிழமை பி. ப 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

எஸ். தர்மகுலசிங்கம்,
செயலாளர்.

பழைய மாணவர் சங்கம். (58471)

## தெல்மராட்சி இளைப்பாற்று வேதனம் பெறுவோர் நலன்புரிச்சங்கம்
## ஆண்டுப் பொதுக்கூட்டம் 1998

காலம்: 22 - 02 - 1998
ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.30 மணி
(புதிய நேரம்)

இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி

அங்கத்தவர் தயவுசெய்து சமுகம் தரவும்.

க. சபாரத்தினம்
தலைவர்

ச. ச. சற்குணசிங்கம்
கௌரவ செயலாளர்

வே. சிவப்பிரகாசம்
பொருளாளர்

குறிப்பு: இற்றைவரை 30 அங்கத்தவர்களுக்கு மரண சகாய நிதி வழங்கப்பட்டுள்ளது. புதிய அங்கத்தவராகச் சேரவிரும்புவோர் சமுகமளிக்கவும்.

கௌரவ செயலாளர்

(சி-2898)

### தமிழ், ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிற்சி வகுப்புகளும் தட்டெழுத்து சேவைகளும்

திறமை வாய்ந்தோரால் கற்பிக்கப்படும். விண்ணப்பங்கள் குறித்தவே வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும்.
காலை 8.30-மாலை 4.30

**JASSEWA**
140, பலாலி வீதி,
(பரமேஸ்வரா சந்திக்கு அருகில்)
திருநெல்வேலி.
(53468)

## வாழ்த்துகின்றேன்

யா/சுன்னாகம்
ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின்
1997 ஆம் ஆண்டின் க. பொ. த (உ த) பரீட்சைப் பெறுபேறுகளை அறிந்து மகிழ்ச்சி அடைவதுடன் அதிபர் திரு. க. சிவாஜி, ஆசிரியர்கள், சித்தியடைந்த மாணவர்களையும் அக மகிழ்ந்து பாராட்டுகின்றேன்.

V. S. சிவரட்ணம் (J. P)
(பழைய மாணவன், அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்)

(53477)

# வட இலங்கை சங்கீத சபை

யாழ்ப்பாணம்.
## தேர்வுகள் - 1998
## செயன்முறைப் பரீட்சை மேற்பார்வையாளர்களைத் தெரிவு செய்வதற்கான
## விண்ணப்பம்

கீழ் உள்ள மாதிரிப் படிவத்தைப் பூரணப்படுத்தி 05 - 03 - 98-க்கு முன் அனுப்பி உதவுக. பாடசாலை ஆசிரியர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள் ஆவர்.

முழுப்பெயர்: ..............................................

கல்லூரி முகவரி: ..............................................
..............................................

சொந்த முகவரி: ..............................................
..............................................

கல்வித் தகைமை: ..............................................
..............................................

சங்கத்தில் அங்கத்துவம் உடையவரா; ..............................................

வட இலங்கைச் சங்கீத சபை செய்முறைப் பரீட்சை மேற்பார்வையாளராக ஏற்கனவே பணியாற்றி இருப்பின் ஆண்டு, பரீட்சை நிலையம் பற்றிய தகவல்களையும் தருக:
..............................................
..............................................

.................... ..............................
திகதி விண்ணப்பதாரியின் ஒப்பம்

அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்,
வட இலங்கை சங்கீத சபை,
கல்வித் திணைக்களம்,
செம்மணி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/2908)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



மலர்வு; 04 — 07 — 1910

உதிர்வு: 20 — 01 — 1998

## திருமதி ஆறுமுகம் இராசம்மா

அன்புத் தெய்வமே! காலமெல்லாம் எமக்கென வாழ்ந்து பாசமழை பொழிந்த உங்கள் குரல் ஓய்ந்து 31 நாள்கள் மறைந்த போதிலும் அம்மா ...... அம்மா ...... எங்கள் குரல் ஓயவில்லை. பாசமிகு தாயாய், மாமியாய், பேர்த்தியாய், பூட்டியாய் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு என்றும் நீங்காது நிலைக்கும்.

இன்று 19—2—98 வியாழக்கிழமை நடைபெறவுள்ள இவரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், நண்பகல் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
தி. பாலமுரளி
[பேரன்]

முட்டப்பனை,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

[53451]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தொடர வேண்டுமா?

வடக்கில் — குடாநாட்டில் — கைதாகிக் காணாமற் போன அறுநூறுக்கும் மேற்பட்ட தமிழர்கள் குறித்து அணுவளவு தகவலைக்கூடப் பெற முடியாமல், அவர்களின் உறவினர்கள் நடைப்பிணங்களாக நாள்களைக் கழிக்கின்றனர்.

இந்த மனிதாபிமான விடயத்தில் நாட்டின் உயர் தலைவரான ஜனாதிபதியினால்கூட எதுவும் செய்ய முடியாதிருப்பது விசனத்துக்குரியது மட்டுமல்ல; தமிழர்களின் உயிர்களைத் தூசாக மதிக்கும், அவர்களின் மனித வேதனைகளைப் புரிந்து கொள்ளாத அரசு இது என்ற நிலையும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

பாடசாலைக்குச் சென்ற மகன் உரிய நேரத்தில் வீடு திரும்பவில்லை என்றால் பெற்றோர் மனம் எவ்வளவு பதைபதைத்துத் துடித்து, உணர்வுகள் சோர்ந்துபோகும் என்பதனை கற்பனை செய்து அளவிட முடியாது. அனுபவித்தவனுக்கே அதன் தாக்கம் தெரியும்; அவனாலேயே முழுமையாக உணர முடியும்.

தமிழர்கள் என்றால் எதுவும் செய்யலாம்; எப்படியும் செய்யலாம்; என்ற அரசின் ''புதிய ஒழுங்கு'' வளர்ச்சி அடைந்து வருவது வேதனைக்கு உரியது.

இதனைக் கைவிட்டுத் தமிழர்களும் இந்நாட்டுப் பிரஜைகளே என்று, ஆகக் குறைந்தது அவர்களும் மனிதப் பிறவிகளே என்று கணித்துக் கருமம் ஆற்ற முடியாதா?

அரசுக்கு இது விடயத்தில் உள்ளார்ந்த அக்கறை மிக மிகக் குறைவு என்பதனை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் புட்டுக் காட்டுகிறது.

கிழக்கில் - மட்டக்களப்பில் -படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஆனால் அதனைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பதனை அவரது கடிதம் சொல்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிலிருந்து ஜனாதிபதி வரை கைதாகிக் காணாமற் போவோர் விவகாரத்தின் தாக்கத்தை திரு. யோசப் நேரில் விளக்கியுள்ளார் - விவரித்துள்ளார்.

ஆனால் கைதானோர் காணாமற் போவதனைத் தடுக்க வேண்டிய—தகுந்த— உகந்த— உரிய—நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வெறும் வாக்குறுதிகளோடும், பதில்களோடும் நின்று விடும் ஏனைய விடயங்களைப் போலவே இதன் கதியுமாகி விட்டது!

அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகிய மிகக்கூரான சட்டங்கள் இரண்டும் உள்ளவரை அல்லது திருத்தப்படாத வரை தமிழர்கள் கைதாகிக் காணாமற் போவது தடுக்கப்பட முடியாத பெருங் கொடுமையாகவே தொடரும்.

இன்று தமிழர்களைப் பதம் பார்க்கும் இச்சட்டங்கள் நாளை இன்றைய அரசின் பதவிக்காலத்திலும் சிங்கள அப்பாவி மக்களையும் பிடித்துக் கடித்துக் குதற மாட்டா என்பதற்கு உத்தரவாதம் இல்லை!

ஜனநாயகத்திலும் மனித உரிமைகளிலும் நாட்டமுள்ள தென்னிலங்கை மக்கள் அமைப்புகள் இதில் கருத்துச் செலுத்த வேண்டிய வேளை வந்துவிட்டது.

# 7, 8 தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்ததால்

# வாழ்வில் பிடிப்புக் குறைந்தவராக அகதி மக்கள்

## மன்னார் நிலை குறித்து ஆயர் தகவல்

நெடுந்தீவு, பெப். 19

மன்னாரின் ஒரு பகுதியில் அகதிகள் நாளுக்கு நாள் மேலும் பல புதிய கஷ்டங்களை எதிர்நோக்குகிறார்கள். பெரும்பாலான மக்கள் ஏழு எட்டுத் தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்ததால் பதினால் வாழ்க்கையை வெறுப்பவர்களாக, அதில் பிடிப்புக் குறைந்தவர்களாக, விரக்தியான நிலையில் உள்ளார்கள்.

எனினும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்புகிறார்கள் இல்லை. என்ன நடக்குமோ என்ற அச்சம் அவர்களுக்கு.

இவ்வாறு தெரிவித்தார் மன்னார் மாவட்ட ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசேப் அடிகளார்.

தமது சொந்த ஊரான நெடுந்தீவுக்கு வந்திருந்த ஆயரை உதயன் செய்தியாளர் சந்தித்து மன்னார் நிலையை குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டம் இப்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதி, இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி என்று இருபகுதிகளாக உள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பிரதேசங்களின் நிலைமைகள் ஓரளவு சீராக உள்ளன. கல்வி, வேலைவாய்ப்புக்கள், உணவு விநியோகம், போக்குவரத்து தொலைத்தொடர்பு, மின்சார வசதிகள் வீதி, புனரமைப்புக்கள் என்பன படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் அரைவாசிக்கும் மேற்பட்ட பகுதி இன்னமும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இந்தப் பகுதியில் உள்ள பிரதேசங்களில் அரசின் சேவைகள் சாதாரண மக்களுக்குக் கிடைப்பதாக இல்லை. மருத்துவ வசதி, கல்வி வசதி, போஷாக்குள்ள உணவுகைகள் போன்றன தேவையில் பத்துச் சதவீதம் கூட கிடைப்பதாக இல்லை.

அகதி நிலையில் உள்ள மக்கள் மேலும் மேலும் அதே நிலைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் கூட தமது சொந்த இடங்களுக்குச் செல்ல விரும்புகிறார்கள். என்ன நடக்குமோ என்ற அச்சம் அவர்களுக்கு.

தற்சமயம் மடுவில் சுமார் 12 ஆயிரம் அகதிகளும், கயிற்சுட்டான் முள்ளிக்குளம் தட்சணமருதமடு பகுதிகளில் சுமார் பதினொராயிரம் அகதிகள் தங்கி உள்ளார்கள்.

இவர்களுக்கான குடியிருப்புக்கள் மற்றும் சில தேவைகளை எமது மறை மாவட்டம் செய்து கொடுத்துள்ளது. தொண்டு நிறுவனங்கள் இந்த மக்களுக்கு உதவுகின்றன.

இதேவேளை எமது மறை மாவட்டப் பங்குகளைச் சேர்ந்த நாற்பத்தைந்து குருமாரும் எண்பது சகோதரிகளும் இந்த மக்களுக்கு மருத்துவம் மற்றும் ஏனைய வழிகளில் தொண்டு புரிந்து வருகின்றனர்.

தவிரவும் நூற்றைம்பது தேவாலயங்களிலும் உள்ள ''அன்பியம்'' அமைப்பு ஊடாக, கஷ்டப்படும் மக்களுக்கு முடிந்த அளவு உதவு மாறு கத்தோலிக்க மக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. கத்தோலிக்க மக்கள் அதனை ஏற்றுத் தம்மால் முடிந்த அளவு, அகதி மக்களுக்கு உதவுகிறார்கள்.

இப்பகுதிகளைச் சேர்ந்தவர்களில் பெரும்பாலான மக்கள் ஏழு எட்டுத் தடவைகளுக்கு மேல் இடம்பெயர்ந்தவர்களாக இருக்கிறார்கள். மக்கள் போதிய போஷாக்கின்றியும் மருத்துவ வசதிக் குறைவினாலும் இறக்க நேரிடுகிறது.

இளவயதினர்கள் கூட உடல் உளத் தாக்கத்தினால் முதியவர்களைப் போன்று தளர்ந்து காணப்படுகின்றனர். தொழில் செய்ய முடியாத நிலை இன்னமும் தொடர்ந்து வருகின்றது.

### அர்த்தமற்றது

சமாதானத்திற்கான போர் என்று கூறுவது அர்த்தமற்றது. போரை நிறுத்தி அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்க வேண்டும்.

பண்டைக் காலங்களில் போரினால் சமாதானம் கிடைத்திருக்கலாம். ஆனால் இன்றோ, ஆயுத உற்பத்திகளும் விற்பனைகளும் அதிகரித்துள்ளன. நவீன ரக ஆயுதங்களைப் பெறக்கூடிய தரித வாய்ப்புக்கள் யுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உண்டு.

எனவே தோல்வியை ஏற்றுக்கொள்ள எந்தத் தரப்பும் தயாராக இருக்காது. இந்நிலையில் போரினால் சமாதானம்கிடைக்கும் என்று கூறுவது அர்த்தமற்றதாகும். எனவேதான் சமாதானத் தீர்வு ஒன்றைக் காண அனைவரும் முன்வர வேண்டும் என்று நாம் கோருவதுடன் எம்மால் இயன்றவரை அதற்காக முயல்கின்றோம்— என்று கருத்து வெளியிட்டார்.

(அ-111)

# காங்கிரஸுக்கு தண்டனை கொடுத்தே ஆகவேண்டும்!

## முன்னாள் பிரதமர் வாஜ்பாய் சொல்கிறார்

புதுடில்லி, பெப். 19

காங்கிரஸ் கட்சியின் 50 ஆண்டு கால தவறுகளுக்கு தண்டனை வழங்கப்படுவது அவசியம்.

பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் பிரதமருமான வாஜ்பாய் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தவறுகளைச் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்பதால் எல்லாம் சரியாகிவிடாது. சுதந்திரத்துக்குப் பின் நீண்ட நாள்கள் காங்கிரஸ் கட்சிதான் ஆண்டு வந்துள்ளது. எனவே நாட்டின் தற்போதைய அவலநிலைக்கு அக்கட்சிதான் காரணம்.

ஏழை எளிய மக்கள் வாங்க முடியாத அளவுக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்ந்து விட்டது. இதற்கு காங்கிரஸைநாம் தண்டித்தே ஆக வேண்டும்.

சோனியா கொடுக்கும் ஒக்ஸிஜனால் காங்கிரஸ் நீண்ட நாள்கள் உயிர்வாழ முடியாது. அந்தளவுக்கு கட்சி மக்களிடம் செல்வாக்கு இழந்து நிற்கிறது.

1984 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி தலைமையின் கீழ் காங்கிரஸ் 415 இடங்களில் வெற்றி பெற்றது. அந்த பெரும்பான்மையை அடுத்த தேர்தலில் அவர்களால் பெற முடியவில்லை. அதற்குக் காரணம் போபர்ஸ் ஊழல் விவகாரம். பீரங்கி பேரத்தில் பெரும் தொகை கமிஷனாகப் பெறப்பட்டுள்ளது.

கமிஷன் வாங்கியவர்களைத் தெரிந்து கொள்ள காங்கிரஸ் விரும்பவில்லை. கடைசியாகப் பதவியிலிருந்த ஐக்கிய முன்னணி அரசும் போபர்ஸ் பிரச்சினையில் மெத்தனமாக செயற்பட்டது. காங்கிரஸ் ஆதரவில் இருந்ததால் ஐ.மு. அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை.

நாட்டின் தற்போதைய சீரழிவுக்கு காங்கிரஸ் காரணமாக இருக்கும்போது, எதை நியாயப்படுத்தி சோனியா வாக்குக் கேட்கிறார் என்று தெரியவில்லை என்றார் வாஜ்பாய். (ஐ)

## இரா. அன்பரசு மீது திருட்டு வழக்கு

சென்னை, பெப். 19

வாக்குச் சீட்டுகள் காணாமல் போனது தொடர்பாக, மத்திய சென்னை காங்கிரஸ் வேட்பாளர் இரா. அன்பரசு மீதும் அவரது ஆதரவாளர்கள் மீதும் திருட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சென்னை மாநகரப் பொலீஸ் கமிஷனர். காளிமுத்து தெரிவித்தார்.

அயனாவரம் மாநகராட்சிப் பள்ளியில் அமைக்கப்பட்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ரஜினியின் பேட்டி ஒளிபரப்பு

# விளக்கம் கோரி “சண்” ரீவிக்கு நோட்டீஸ்

சென்னை, பெப். 19

வாக்களிப்பு தினத்தில் நடிகர் ரஜினிகாந்தின் பேட்டியை ஒளிபரப்பியது தொடர்பாக விளக்கம் கேட்டு சண் ரீ.வி. நிறுவனத்துக்கு தலைமைத்தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இது குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி கே. ஏ. மாத்யூ கூறியதாவது:

சண் ரீ.வியில் நடிகர் ரஜினிகாந்த் பேட்டி தொடர்ந்து பல முறை திங்கட்கிழமை ஒளிபரப்பப்பட்டது. இது பிரசாரம் செய்வது போல் இருந்ததாகப் புகார்கள் வந்துள்ளன. ஆனால் எழுத்து மூலம் புகார்கள் வரவில்லை.

தேர்தல் சட்டவிதிகளின் படி பத்திரிகைப் பேட்டிகள் கணிப்புகள் அனுமதிக்கப்பட்டு உள்ளன. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்சியினையோ அல்லது வேட்பாளரையோ ஆதரித்துப் பிரசாரம் செய்வது குற்றமாகும்.

இம்முறையில் பிரசாரம் செய்வதாக டில்லியிலுள்ள தலைமைத் தேர்தல் ஆணையகத்துக்குப் புகார்கள் வந்துள்ளன. எனவே அது குறித்து விளக்கம் கேட்டு 'சன்' ரீவிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. விளக்கத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் — என்றார். (ஐ-10)

## மத ஒற்றுமையை வலியுறுத்தி

# கருணாநிதி பாடிய இந்திப் பாடல்

சென்னை, பெப். 19

மத ஒற்றுமையைப் தொடர்பு படுத்தி இந்தித் பாடல் வரிகளை விழுப்புரத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முதல்வர் கருணாநிதி பாடிக்காட்டினார்.

மத ஒற்றுமை குறித்துப்பேசினாலும் — பாடினாலும்மட்டும் ஒற்றுமை வந்துவிடாது. பெரும்பான்மை சமுதாயத்தைச் சிறுபான்மை சமுதாயம் மதித்து நடக்க வேண்டும் சிறுபான்மை சமுதாயத்தை பெரும்பான்மை சமுதாயம் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்று முதல்வர் தெரிவித்தார்.

''இந்து முஸ்லிம் சீக்இஸாயி ஆபஸ் மே ஹை பாயி பாயி'' என்ற பாடல் வரிகளையே பாடிக்காட்டினார்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியச் செய்திகள்

## நாகாலாந்தில் உள்ள

# ஒரேயொரு தொகுதியும் காங்கிரஸுக்கே!

நாகாலாந்து மாநிலத்தில் உள்ள ஒரே ஒரு மக்களவைத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

அத்தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட லோக்சக்தி வேட்பாளர் அச்செய் அசுமி போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துவிட்டார்.

இதனால் காங்கிரஸ் வேட்பாளர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்.

ஏற்கனவே மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் மொத்தம் உள்ள 60 இடங்களில் 43 இல் காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர்.

தேர்தலைப் புறக்கணிக்குமாறு நாகா தீவிரவாதிகள் அச்சுறுத்தி இருந்தனர்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை உடனடியாக இயங்கச் செய்க

## சுகாதார அமைச்சுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், பெப். 19

தெல்லிப்பழை புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும் என்று வலி—வடக்கு புனர்வாழ்வுக் கழகமும், தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்கமும் இணைந்து சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளன.

இது தொடர்பாக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள மகஜரில் தெரிவிக் கப்பட்டதாவது:—

1987 ஆம் ஆண்டு போக்கு வரத்து, இருப்பிட வசதி நெருக்கடிகளை உணர்ந்து சட்டத்தரணி குமார் பொன்னம்பலத்தினால் அவருடைய தந்தை ஜீ. ஜீ. பொன்னம்பலம் நினைவாக ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு மேல் செலவு செய்து இந்த நிலையம் அமைத்துக் கொடுக்கப் பட்டது.

யுத்த சூழ் நிலையால் இந் நிலையம் மூடப்பட்டிருந்ததுடன், பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நிலையத்திற்குச் சொந்தமான வைத்திய உபகரணங்கள் யாவும் மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டன.

வடபகுதியில் நிலவும் தற் போதைய சூழ்நிலையில்புற்று நோயவர்கள் கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதில் பல்வேறு கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

1987,85ஆம்ஆண்டு காலப் பகுதிகளில் சராசரி 400 பேர் புற்றுநோயாளிகளாக இருந் தார்கள். இத்தொகை 1992 இல் 650 ஆக உயர்ந்தது. தற்பொழுது இந்த நோயாளர் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருகின்றது.

புள்ளி விவரங்களைப் பார்க்கும் போது யாழ். மாவட்டத்தில் புற்றுநோய் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலையில் தெல்லிப் பழை புற்று நோய்ச்சிகிச்சை நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்தால் இந்த நோயாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். இதற்கென தெல்லிப்பழையில் அமைக்கப்பட்ட கட்டடம் எவ்வித பாதிப்பும் இன்றி உள்ளது. எனவே வட பகுதி பாதுகாப்பு அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இதனை மீண்டும் இயங்கச் செய்வதுடன் இந்தச்சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றுவதற்கென வெளி நாட்டில் பயிற்சி பெற்று தற்போது மகரகமவில் கடமையாற்றும் வைத்திய அதிகாரியை இந்த நிலையத்திற்கு வரவழைத்து புற்று நோய்ச்சிகிச்சை நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்ய வேண்டும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஓய்வு பெற்றார்

இலங்கைவங்கி நெல்லியடிக்கிளையில் சுமார் 35 வருட காலம் காசாளராகப் பணி புரிந்த வ. தம்பையா கடந்த மாதம் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

# ஈ.பி.டி.பி. அமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்)

கிய நாம் ஆற்றிவருவது தாங்கள் யாவரும் அறிந்ததே. யுத்த சுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, தம் எதிர்கால நிலையினை எண்ணி நொந்த நிலையில் உள்ள எம் மக்களின் இயல்பான வாழ்க்கைக்கும், கௌரவமான அரசியல் தீர்வுக்கும் எமது கட்சி உழைத்து வருகின்றது. விடுதலைப் போராட்டத்தில் நாமும் ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள். எம் நோக்கும் மக்களின் சுதந்திரமான, கௌரவமான வாழ்க்கைக்கே. இடையில் எம்மவர்க்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளினால் நாம் ஆயுதப் போராட்டத்தினின்றும் விலகி ஒரு ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்ததோடு இப் போராட்டத்தினால் நலிந்திருக்கும் எம் மக்களின் துன்பங்களில் எமக்கும் பங்குண்டு என்ற நிலையில் எம் மக்களின் அன்றாடச்சுமைகளைக் குறைத்து ஓரளவேனும் அவர்கள் நிம்மதிப் பெருமூச்சினை விட எம்மாலான அனைத்து செயற்பாட்டினையும் செய்து வருகின்றோம்.

எமது கட்சியின் செயற்பாடு, நடவடிக்கை என்பன எம் மக்களின் வாழ்க்கையின் உயர்விற்கே. அவர்கள் மீது நாம் சவாரி விடுவதற்கோ அல்லது அவர்களின் உழைப்பினை உறிஞ்சிக் குடிப்பதற்கோ அல்ல. அண்மைக் காலங்களில் எம் கட்சிமீதும், கட்சி உறுப்பினர்கள் மீதும் பல அபாண்டமான பொய்ப் பிரச்சாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. நாம் அப்பாவி மக்களின் உயிரைக் குடிக்கும் காட்டுமிராண்டிகளோ அன்றி, வாழ்க்கையின் திசை தெரியாது தவித்துக் கொண்டிருக்கும் மக்களின் உழைப்பினைப் பறித்தெடுக்கும்வக்கற்றவர்களோ அல்லர் நாம் ஒரு போதும் எந்த மக்களிடமும் வரி வசூலித்ததோ, பணப் பறிப்புச் செய்ததோ, சொத்துக்களைச் சூறையாடியதோ கிடையாது. எப்போதும் செய்ததுமில்லை; செய்யப் போவதுமில்லை.

எமது கட்சியின் பெயரை களங்கப்படுத்தவும், அதன் ஜனநாயகப்போக்கைக்குறைக்கவும் முனையும் அரசியல் வங்குரோத்தாளர்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருகிறார்கள்.

எமது கட்சியாகிய ஈ.பி.டி.பி. மீண்டும் உங்களிடம் வேண்டிக் கொள்வது எமது கட்சியின் பெயரைப் பாவித்து யாராவது மிரட்டல், பணப் பறிப்பு, சொத்துக்களைச் சூறையாடுதல் போன்ற பல மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டால் உடனடியாக எம் கட்சிக்காரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு மக்கள் விரோத செயலில் ஈடுபடுவோரை இனங் காட்டவும், அம்பலப்படுத்தவும் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு வர்த்தகர்கள் சங்கங்கள், வாகன உரிமையாளர் சங்கங்கள் என்ற போர்வையில் வரிகள் வசூலிப்பதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் நடக்கின்றன என்பதையும் இச்சங்கங்களில் செயற்பாடும் சில தனி நபர்கள் தங்கள் சுய இலாபங்களுக்காக இத் திரைமறைவுக்காரர்களுடன் செயற்பட்டு வருவதையும் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். இவற்றிற்கு ஏமாந்துவிடாது விழிப்புடன் செயற்படுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

நாம் ஆயுதம் தாங்கியிருப்பது எமது தற்பாதுகாப்புக்கே தவிர எவர் மீதும் எமது மேலாதிக்கத்தைத் திணிப்பதற்கோ அல்லது யாரையும் தேடி அழிப்பதற்கோ அல்ல. அண்மைக் காலங்களில் மாற்றுக் கட்சியினரால் எமது தோழர்கள் கொல்லப்பட்டும், தாக்கிக் காயப்படுத்தியும் எமது ஜனநாயக நடவடிக்கைக்கு பல சவால்களை, சதிவேலைகளை, ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை கோழைத்தனமான முறையில் செய்த போதும் எமது தோழர்கள் நிதானத்துடன் நடந்தே வருகின்றனர். ஜனநாயகவாதிகள் எனக்கூறிக்கொண்டு கத்திச் சண்டித்தனம் நடத்துபவர்களோ, ஆயுதமுனையில் அப்பாவி மக்களை கடத்தி பணம் பறிப்பவர்களோ அல்லர் நாம். என்றும் தெளிவாகவும், வெளிப்படையாகவுமே நாம் செயற்படுகின்றோம். நல்ல சக்திகளை இனங்கண்டு அவர்களுடன் கைகோர்த்து மக்களின் துயரினைப் போக்க நாம் ஒரு போதும் பின்நிற்கமாட்டோம்.


மக்களே! 'காய்க்கின்ற மரத்திற்கு கல்லெறி' என்பது போல அரசியல் வறுமையாளர்கள் வயிற்றெரிச்சலில் பல முனைகளில், பல வழிகளில் எம்மைக் களங்கப் படுத்த முயற்சிப்பார்கள். இவற்றிற்குத் துணை போகாது, இப்பசுத்தோல் போர்த்திய புலிகளை இனங் காட்ட என்றும் உங்கள் ஒத்துழைப்பினை நாடி நிற்கின்றோம். நாம் மக்களின் எஜமானர்கள் அல்லர். என்றும் நாம் மக்களின் சேவகர்களே.

# நெஞ்சை விட்டு நீங்காத முதலாம் ஆண்டு நினைவலைகள்




திருமதி ம. நீலாம்பிகை

அன்னை மடியில்: 12 — 11 — 1952



செல்வி ம. மைதிலி

அன்னை மடியில்: 29 — 04 — 1972



செல்வி ம. மஞ்சுளா

அன்னை மடியில்: 10—6—1973



செல்வி ம. மாலதி

அன்னை மடியில்: 08—01—1975



செல்வி ம. மேனகா

அன்னை மடியில்: 22—10—1984

பயணத்தின் பாதியில்: 19 - 02 - 1997

கண்ணீர்க் கடலில் நாம் மூழ்க — எமை
கார்கடல் தான் பிரித்ததையோ!
பல கனவுகளோடு அன்று பயணமானீர்கள்
கொடிய கடல் உங்கள் உயிரை எடுத்ததேனோ?
அஞ்சுகத்தை தந்த அன்னையும் எங்கே
மஞ்சு மாலா மைதிலி அக்காவும் எங்கே
பஞ்சு மனம் கொண்ட தங்கை மேனகா எங்கே
குஞ்சுகளைப் பிரிந்து நீரும் சென்றது எங்கே
வந்த எமன் தந்ததுயர் கொஞ்சமுமில்லை
வாடி நாமும் வதங்குகின்றோம் ஆறுதல் இல்லை
கண்ணீர்க் கடலில் எம்மிருவரையும் தவிக்கவிட்டு
கரிய கடல் மடியில் நீவிரும் துயில்வதேனோ?
ஆண்டு ஒன்று ஆகினாலும் பாசம் மாறுமோ
நித்தம் நாமும் படுகின்ற துயர்தான் ஆறுமோ
பாசப் பறவைகளே ஒரு தடவை உங்கள்
நேசமுகம் காட்டீரோ! காட்டீரோ!

உங்கள் பிரிவால் துயருறும்:

**ம. ராகவன், ம. ரமணன்**

செங்குந்த வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (534849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித் தடை காரணமாக
# சுழிபுரம் மீனவர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 19

சுழிபுரம் புளியந்துறை சவுக்கடி கடலில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் சுழிபுரம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டரை மாத காலமாக மீன்பிடித்தடை தொடர்ந்து அமுலில் உள்ளதால் 75 கடற்றொழிலாளர் குடும்பங்கள் தொழில் செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளது

இப்பகுதி கடற்றொழிலாளர்கள் தமது நிலை குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மற்றும் கடற்றொழில் அமைச்சு வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, பொன்னாலை கடற்படைத் தளபதி உட்பட பலருக்கு மகஜர்களையும் கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் மீளக் குடியேறிய பின்னர் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் படையினரின் நிபந்தனைப்படி சுழிபுரம் வறுத்தோலை பாடசாலையிலுள்ள படையினரிடம் தினமும் காலை 6 மணிக்கு அனுமதி பெற்று படையினர் இருவரின் கண்காணிப்புடன் மீன்பிடிப்பதற்கு சென்று காலை 10 மணியுடன் தொழிலை முடித்து திரும்பி வந்து விடுவர். அவ்வாறு இவர்கள் படையினரின் மேற்பார்வையின் கீழே தொழில் செய்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த இரண்டரை மாதங்களுக்கு முன் திடீரென இவர்கள் குறிப்பிட்ட கடலுக்கு மீன் பிடிக்கச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது.

இதேபோன்று மாதகல் பகுதி கடலிலும் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டதால் அங்குள்ள கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன. (ஐ-5)

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 19

நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு வித்தியாலய விளையாட்டுத் திடலில் இன்று வியாழக்கிழமை நடைபெறுகிறது

தீவுகள் தெற்கு பிரதேச செயலாளரும், வேலணை, நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரிகளும் பிரதம அதிதிகளாக கலந்துகொள்ளும் இந் நிகழ்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்களை பாடசாலை பழைய மாணவர் சங்கம் வழங்கவுள்ளது.

(ஐ-4)

★ ★ ★

அராலி வடக்கு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எம். மகாதேவா தலைமையில் நடைபெறும். (ஐ-80)

★ ★ ★

யாழ். புனித மரியாள் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் சி. தார்சீசியஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

## பாராட்டு வைபவம்

கொழும்புத்துறை, பெப். 19

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் 'சமூகஜோதி' கா. கணேசதாசன் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதைக் கௌரவிக்கும் பாராட்டு வைபவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் சி. ஆர். சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

## தினமும் 600 லீற்றர் மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ். குடாநாட்டிலுள்ள எரிபொருள் நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் நாளாந்தம் விநியோகத்துக்கென 600 லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது.

கள்ளச்சந்தை மற்றும் மண்எண்ணெய் தட்டுப்பாடு போன்றவற்றை இல்லாமல் செய்வதே இதன் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-5]

## சாரணர் கண்டி செல்ல இலவச விமான வசதி

கண்டியில் நடைபெறவுள்ள 5 ஆவது தேசிய சாரணர் ஜம்போறியில் யாழ். மாவட்டத்திலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்தின் தென்மராட்சி பளைப் பிரிவில் இருந்தும் 88 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இரத்மலானை செல்வதற்கான விமான சேவையை இலவசமாக வழங்க இராணுவமும் விமானப்படையினரும் முன் வந்துள்ளதாக பலாலியில் உள்ள வடபகுதி பாதுகாப்பு தலைமையகம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28 பேர் அடங்கிய சாரணர்களின் முதலாவது அணி நேற்று முன்தினம் பலாலியில் இருந்து இரத்மலானைக்குப் பயணமாகியது. எஞ்சிய 60 பேர் கொண்ட அணி இன்று புறப்படவுள்ளதாக அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கருணாநிதி..

(7 ஆம் பக்கத் தொடர்)

'பாட்டில் மட்டும் தத்துவம் இருந்தால் போதுமா? எல்லோரும் சகோதரர்களாக வாழ வேண்டாமா?

இந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் உறவு முறை வைத்துக் கொண்டு அண்ணன் தம்பி என்றும் மாமன் மச்சான் என்றும் பழகுகிற தமிழ்நாட்டில் வீணாக ரத்தக்களரி உண்டாக வேண்டாம்.

கோவையில் நடந்தது வெளிநாட்டுச் சதி, ரீ.வி.யில் பேட்டியளித்த தம்பி ரஜினி காந்த் இது வெளிநாட்டு சதி மட்டுமல்ல. உள்ளூர்காரர்களும் நடத்திய சதி என்று தெளிவாகக் கூறியுள்ளார். வன்முறையை நாம் வளர்க்கக் கூடாது.

இதை மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் — என்று கருணாநிதி மேலும் தெரிவித்தார் (ஐ-10)

## இரா..

(7 ஆம் பக்கத் தொடர்)

டிருந்த வாக்குச் சாவடிக்கு இரா. அன்பரசுவும் அவரது ஆதரவாளர்களும் பிற்பகல் 3 மணிக்கு வந்தனர். சிறிது நேரம் இருந்துவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர்.

இந் நிலையில் 0491651 முதல் 0491700 வரை எண்ணுள்ள வாக்குச் சீட்டுகள் அடங்கிய புத்தகத்தை காணவில்லை என்று தேர்தல் அதிகாரி புகார் கொடுத்தார். புகாரின் பேரில் அன்பரசு மற்றும் அவரது ஆதரவாளர்கள் மீது திருட்டு வழக்கு உட்பட பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் காளிமுத்து

(ஐ-10)

## சாயி சிந்தனை

திரேதா யுகத்தில் தெய்வ சக்திகள் ஒரு புறமும் அசுரசக்திகள் வேறொரு புறமும் இருந்தன. துவாபர யுகத்தில் தெய்வ சக்திகளும் அசுர சக்திகளும் ஒரே அரசில் இருந்தன. ஆனால் இன்று. (கலியுகத்தில்) ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தேவ சக்திகளும், அசுர சக்திகளும் போரிடுகின்றன. இதுவே கலியுகத்தின் தன்மையாகும்

திரேதா யுகத்தில் இராமன் நேரடிப் போரில் ஈடுபட்டான். துவாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் மற்றவர்களைக் கருவியாகப் பயன்படுத்தி தான் சாட்சியாக இருந்து செயற்பட்டான். தானாகப் போரில் நேராக ஈடுபடவில்லை.

கலியுகத்தில் தெய்வ சக்திகளும் அசுரசக்திகளும் ஒரே உடலில் செயற்படுகின்றன. இறைவன் சாட்சியாக இருந்து மனச்சாட்சியாய்ச் செயற்படுகின்றார். மனிதன் தனக்குள்ள விவேகத்தைக் கொண்டு தன்னிடமுள்ள தீய சக்திகளுடன் போரிடவேண்டும் தனது மனச்சாட்சியின் குரலைக் கேட்டு சொந்த முயற்சியால் தெய்வ சக்திகளை வளர்க்க வேண்டும்.

இந்தக் காரணத்துக்காகத்தான் மனிதனுக்கு மனச் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. சரியெது, தவறெது, நல்லதெது, தீயதெது என்பவற்றைப் பிரித்து செயற்படுவதற்கும், தெய்வப் பண்புகளை வளர்க்கவும் இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும். இதுவே கலியுகத்தின் சிறப்பான அம்சம்.

இந்த யுகத்தில் ஒவ்வொருவரும் அசுர சக்திகளுக்கு எதிராகத் தானாகவே போரிட்டு வெல்ல வேண்டும். இந்த முயற்சி வெற்றி பெற்றால் மனிதனின் இயல்பான தெய்வீகத்தன்மை தானாகவெளிப்படும்.

ஆதாரம்: சனாதன சாரம்

## நாளை

மாசி 8

வெள்ளிக்கிழமை

திதி: நவமி

முழுவதும்

நட்சத்திரம்: அனுஷம்

நண்பகல் 12 21 வரை.

சுபநேரம்: 6.32-8.02

ராகுகாலம்: 11.02-12.32

## விதவைகளுக்குச் சேரவேண்டிய வாழ்க்கைச் செலவுப் படி நிலுவை

உதயன் பத்திரிகையில், 10. 02. 98 இல் 4ஆம் பக்கச் செய்தியாக மார்ச் ஒய்வூதியத்துடன் நிலுவைப்பணம் கிடைக்கும் என்றும், கடந்த 1988 ஜனவரி முதல் 1989 வரையான 18 மாதங்களுக்கான இந்த வாழ்க்கைச் செலவுப் படி நிலுவைகள் ஒய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளது எனவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய சுற்றறிக்கை சகல பிரதேசங்களுக்கும் ஒய்வூதிய பணியாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாநில ஒய்வூதியச் சம்மேளனத் தலைவர் சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கை சகல பிரதேச செயலகங்களுக்கும் மூன்று மாதங்களுக்கு முன்னரே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை வானொலியில் நான்கு மாதங்களுக்கு முன் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டது. அத்துடன் உதயன் பத்திரிகையிலும் தைமாதத்தில் இச்செய்தி வெளிவந்தது.

நான் இவ்விடயத்தில் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவெனில் 1991 ஆம் ஆண்டு (ரூபா 260 × 12 = 3,120 ரூபா 1997 ஆம் ஆண்டில்) கொடுக்கப்பட்ட நிலுவைப்பணம் இன்னும் அனேக விதவைகளுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதே ஆகும்.

1996 பிற்பகுதியிலும் 1997 முற்பகுதியிலும் பிரதேச செயலகம் மூலம் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது யாழ்ப்பாணம் ஒய்வூதியக்கிளை செயலகத்தில் இருந்து பிரதேச செயலகங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஒய்வூதியக்கிளை விதவைகளின் ஒய்வூதியர் கோவைகளை மட்டும் அனுப்பினார்கள் ஆனால் அவர்களின் இறந்த கணவர்மாரின் ஒய்வூதியர்கோவைகள் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

## வாசகர் திருமுகம்

பிரதேச செயலகம் அவர்களின் காலஞ்சென்ற கணவன்மார்களின் ஒய்வூதியக் கோவையின்றி விதவைமார்களுக்கு மேலே குறிப்பிட்ட நிலுவைப்பணம் வழங்க முடியாமல் இருக்கின்றன. இந்த நிலுவைப்பணம் ஒரு குறிப்பிட்ட சம்பளத்துக்குட்பட்டோருக்கு மாத்திரம் வழங்கப்படவுள்ளது. விதவைகளுக்கு அவர்களின் கணவன்மாரின் ஒய்வூதியர் கோவை இல்லாமல் வழங்க முடியாத நிலை பிரதேச ஒய்வூதியச் செயலகம் எதிர்நோக்குகின்றது

1997க்கு முன்னர் ஒய்வூதியம் வழங்கப்பட்டபோது அவர்களும் இந்த நிலுவைப்பணத்தைப் பெற்றார்கள். ஆனால் சில விதவைகள் பெறவில்லை. அதாவது தற்போது இருக்கும் அரசாங்கம் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஒய்வூதியங்களுக்கு 1988 ஆம் ஆண்டிலிருந்து 1993 வைகாசி மாதம் உட்பட்ட காலத்துக்கு விசேட வாழ்க்கைப்படி ரூபா 260/- நிலுவைப் பணத்துடன் கொடுப்போம் என்று தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்தார்கள்.

ஆட்சிப்பீடம் ஏறியவுடன் 1994 ஆம் ஆண்டு 5 மாதம் அதாவது 1993 தை மாதம் தொடக்கம் வைகாசி மாதம் மட்டும் வழங்கப்பட்டது. ரூபா 260 × 5 மாதம் 1,300 ரூபா விதவைகள் உட்பட எல்லோருக்கும் வழங்கப்பட்டது. இது யாழ்ப்பாணத்தில் 1992 ஆம் ஆண்டில் 6 மாதம் 1995 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மிகுதி ஆறு மாதம் 1996 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து தற்காலிகமாக இந்துக் கல்லூரியில் கச்சேரி யாழ்ப்பாணம் கச்சேரி இயங்கிய பொழுது வழங்கப்பட்டது. குறிப்பிட்ட சம்பளத்துக்கு உட்பட்ட ஒய்வூதியங்கள் விதவை ஒய்வூதியர்கள் உட்பட எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

1997 இல் பிரதேச செயலகம் மூலம் வழங்கப்படத் தொடங்கிய காலத்தில் இருந்து 1991 ஆம் ஆண்டு ஒருவருடம் நிலுவைப்பணம் 3,120 ரூபாவை அனேக விதவைகள் பெறவில்லை. காரணம் மேலே குறிப்பிட்டிருக்கின்றேன். 1998 ஆம் ஆண்டு அனேக விதவைகள் 18 மாதம் நிலுவைப் பணம் பெறமாட்டார்கள்.

விதவைகளுக்கு இந்த 7,800 ரூபாக்கு கிடைக்குமானால்— இடம்பெயர்ந்து மீண்டும் வீடுவாசல் முழுமையாகவும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டிச் சந்தை புனரமைப்பு

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின், உடுப்பிட்டி உப அலுவலகப்பிரிவில் மிகவும் பழமை வாய்ந்த சந்தை எனவும், சுகாதார வசதி அற்றது எனவும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் இனங் காணப்பட்டு சுகாதார வசதியைக் கருத்திற் கொண்டு புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிதியைப் பயன்படுத்தி உள்ளூராட்சித் திணைக்கள' பிரதேச செயலக தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் திட்டப்படி அவர்கள் மேற்பார்வையில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஐ. நா நிதிக்கு சமனாக மக்கள் பங்களிப்புத் தேவையென வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இவ் வேண்டுகோளுக்கு ஏற்ப இமையாணன் மேற்கு கிராம அலுவலர் திரு. க. இரத்தினம் அல்லும்பகலும் கிராம மக்களை இவ் வேலையிலும் ஏனைய பங்களிப்புகளிலும் ஈடுபடுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றினார். சந்தைக் கட்டடமும் மிகவும் கம்பீரமாகக் காட்சியளிப்பது பாராட்டுக்குரியது.

ஆனால் எதிர்பார்க்கப்பட்ட சுகாதாரவசதிக்கு அமைய சந்தைக் கட்டடம் அமையவில்லை என்பதையும் அதனை நிறைவு செய்ய அங்குள்ள குறைபாட்டையும் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கும் அதிகாரிகளுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மீன் சந்தை திறந்த நிலையில் இருப்பதால் பறவைகள் வியாபாரிகளுக்குத் தொல்லை கொடுப்பதுடன் எச்சம் போடுவதற்கும் வாய்ப்பாகிறது. அடுத்து மீன் வைத்து விற்பதற்கு சிறு சிறு மேடைகள் கட்டப்பட்டுள்ளன. அதில் மீன் சந்தை பாவனைக்கு விடப்படாதபோதே மேடையில் கட்டாக்காலி நாய், பூனைகள் உல்லாசமாகப் படுத்து உறங்குவதைக் காண முடிகிறது. வியாபாரம் தொடங்கினால், கழிவுப்பொருள்கள் சேரும் போது மேற்படி தொல்லைகள் அதிகரிக்கவே செய்யும். இது சுகாதாரத்திற்கு உகந்ததல்ல. எண்ணிய நோக்கம் நிறைவேறுமா?

மேற்படி குறைபாட்டை உணர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறைபாட்டை முன்னேற்பாடாகவே நிவர்த்தி செய்வார்களா?

உடுப்பிட்டி

கு. பூரணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராதனை பல்கலைக்கழக வளாகம் நள்ளிரவு படையினரால் முற்றுகை

## 500 மாணவர்கள் வரை விசாரணைக்குள்ளாகினர்

கொழும்பு, பெப். 19
கடந்த செவ்வாய் நள்ளிரவு பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தைப் பொலீஸார் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர்.

தீவிரவாத சந்தேக நபர் ஒருவர் பல்கலைக்கழக வளாகத்துக்குள் ஊடுருவி விட்டதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த முற்றுகை இடம்பெற்றது.

கண்டி, பேராதனை பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொலீஸார் வளாகத்தை முற்றுகையிட்டு தேடுதல் மேற்கொண்டனர்.

இரண்டு மணித்தியாலங்களுக்குமேல் இந்தத் தேடுதல் இடம்பெற்றது. இந்தத் தேடுதலின் போது வளாகத்தில் தங்கியிருந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் சரிபார்க்கப்பட்டன.

மூன்று மாணவர்கள் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் வளாகத்தின் தேநீர்ச்சாலையில் வேலை செய்த மூன்று ஊழியர்கள் கைதாகி உள்ளனர்.

ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தின் பின்னர் முதல் தடவையாக பேராதனை பல்கலைக்கழக வளாகம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் தலையில் காயத்துடன் தமிழர் ஒருவர் சிகிச்சை பெற்றதாகக் கிடைத்த தகவலை அடுத்தே, அவர் பல்கலைக்கழகத்துக்குள் மறைந்திருக்கலாம் என்ற ஊகத்தில் பொலீஸ் முற்றுகை இடம்பெற்றது.

சிகிச்சை பெற்ற அந்தத் தமிழர் பொலீஸார் அங்கு சென்று விசாரணையை ஆரம்பிக்க முன்னரே குணமடைந்து ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி இருந்தார்.

ஜனவரி 25 ஆம் திகதி இடம்பெற்ற தலதா மாளிகைக் குண்டு வெடிப்புடன் இவர் தொடர்பு பட்டிருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். (இ-10)

# படையினர் துப்பாக்கிச் சூடு மூவர் பலி!

வவுனியா, பெப். 19
மன்னார் முருங்கன் முன்னரங்க நிலைகளை ஊடறுத்து செல்ல முற்பட்ட மூவர் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் படையினரின் சூட்டிற்கு பலியாகினர்.

முருகன் சிதம்பரம் (முருங்கன்), சிவலிங்கம் உதயகுமார் (அடம்பன்), ராமசாமி தங்கவேல் (அடம்பன்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

நேற்றுக்காலை மீட்கப்பட்ட இச் சடலங்களுடன் 2 கிரனேட்டுக்களும், தடை செய்யப்பட்ட சில பொருள்களும் இருந்ததாகப் படையினர் தெரிவித்தனர்.
(இ-164-3)

# குண்டுவெடிப்பு மற்றும் சம்பவங்களில் கொல்லப்படுவோரின் படங்களை பிரசுரிக்கத் தடை

கொழும்பு, பெப். 19
புகைப்படங்களைப் பிரசுரிப்பது அல்லது ஒளிபரப்புவது தொடர்பான ஒழுங்கு விதி ஒன்றை அரசாங்கம் பிரகடனப்படுத்த உள்ளது.

இதனை அமுல் செய்ய தகவல் பணிப்பாளர் தகுதி வாய்ந்த அதிகாரியாகக் கடமையாற்றுவார்

ஒழுங்கு விதிகளின்பிரகாரம் குண்டு வெடிப்பு அல்லது இது போன்ற சம்பவங்களில்கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த ஒருவரின் புகைப்படத்தை எந்த ஒரு புதினப் பத்திரிகையோ அல்லது வெகுஜன தொடர்புசாதனங்களோ அனுமதி இன்றி பிரசுரிக்கவோ அல்லது வெளியிடவோ முடியாது.

கொல்லப்பட்ட நபரின் உடற்பாகத்தையும் எவரும் பிரசுரிக்கவோ, ஒளிபரப்பவோ அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு வெளியிடுவதானால் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும்.
[இ-9]

# துப்பாக்கிச் சூட்டில் காயம்

தற்செயலாக வெடித்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தமிழ் கட்சி ஒன்றின் உறுப்பினர் காயமடைந்தார்.

ஊர்காவற்றுறையில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15-139)

# கற்பாறையில் விடப்பட்ட பெண்ணின் பரிதாப முடிவு!

வன்னிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு யாழ். கடல் நீரேரியூடாக வந்தவர்களில் இடை நடுவில் இறக்கிவிடப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் இரு நாள்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது —

கடந்த சனிக்கிழமை 32 பேருடன் நாச்சிக்குடாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த படகு கல்முனைப் பகுதியில் மூழ்க ஆரம்பித்தது. மூழ்க ஆரம்பித்த படகில் இருந்தவர்களை மீனவர்கள் காப்பாற்றி தமது படகுகளில் குருநகர் சீநோர் முகாமுக்குக் கொண்டுவந்தனர்.

எனினும் பிரஸ்தாப வயோதிபப் பெண்மட்டும் ஒரு கற்பாறையில் அங்கு தங்கவிடப்பட்டிருந்தார். படகுகள் மீண்டும் திரும்பிவரும்போது இவரை ஏற்றிச் செல்வதாக இருந்தது.

அவ்வழியால் சென்ற சில மீனவர்கள் கற்பாறையில் ஒரு வயோதிபப் பெண் தனியாக நிற்பதைக்கண்டு அவருக்கு உண்பதற்கு பணிஸும், தண்ணீரும் வழங்கியது தெரியவந்தது.

கடந்த திங்கட்கிழமை மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் சிலர் கற்பாறையில் ஒரு பெண் இறந்து கிடந்ததைக் கண்டனர்.

இராணுவத்தினருடன் அவர்கள் தொடர்பு கொண்டதையடுத்து கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த அரசரத்தினம் அன்னபாக்கியம் (வயது 84) என்ற அந்த வயோதிபப் பெண்ணின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-9-15-139-86)

# தமிழ்-சிங்களபுத்தாண்டுக்குமுன் பாதை திறக்கப்பட வேண்டும்

## படைத்தளபதிகளிடம் அனுருத்த தெரிவிப்பு

"தமிழ்—சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் வவுனியா—கிளிநொச்சி பாதையை எப்படியும் திறந்துவிட வேண்டும்"

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கைத் தளபதிகளிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தியதாகக் கொழும்பு செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

மாங்குளம் நகரை அண்டியுள்ள போர்முனைக்கு முப்படைத் தளபதிகளுடன் அனுருத்த கடந்த திங்கட்கிழமை விஜயம்செய்திருந்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குள்ள படை அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

அதேநேரம்— மாங்குளம் போர்முனைக்கு உள்நாட்டு-வெளிநாட்டுச் செய்தியாளர்களை அழைத்துச்செல்ல நேற்று ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் செய்தியாளர்கள் விஜயம் செய்தார்களா என்பதை நேற்றிரவு வரை உறுதிசெய்ய முடியவில்லை.
(இ-3)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்)

ராக ஜனாதிபதி இருக்க வேண்டும். உபதலைவராக எதிர்கட்சித் தலைவர் இருக்க வேண்டும். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர், தகவல்துறை அமைச்சர், முப்படைத் தளபதிகள், பொலீஸ் மாஅதிபர் ஆகியோர் சபையில் அங்கம் வகிக்கவேண்டும் — என்று சுசில் முனசிங்க தெரிவித்துள்ளார்.

யுத்த முடிவுகளை மேற்கொள்ள மேற்படி அங்கத்தவர்கள் போதுமானவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் — நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் இந்தச் சபையில் இடம்பெறவேண்டும் என்று சிறிமானி கருத்துத் தெரிவித்துள்ளார்.

யுத்த சபை அமைக்கும் பிரேரணை எப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற விவரங்களை அவர்கள் வெளியிடவில்லை.

## கீரிமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்கு அன்று காலையில் இருந்து தெல்லிப்பழையில் இருந்து காலை 11.00 மணி வரை பேருந்து சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கச் செல்ல ஏற்பாடு செய்யுமாறு சமய, பொது அமைப்புக்கள் வடபிராந்திய இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ. 3)

# குஞ்சுக்குளத்தில் 2 படையினர் பலி! 27 பேர் காயம்!!

வவுனியா, பெப். 19
மாங்குளத்துக்குத் தெற்கே குஞ்சுக்குளம் பகுதியில் அமைந்துள்ள முன்னணிக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் 2 படையினர் உயிரிழந்தனர்; 27 படையினர் காயமடைந்தனர்.

அப்பகுதி மீது நேற்றும் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
(இ-164-3)

## செட்டிகுளம் பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

புரம் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

பலாலி இராணுவ தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

கிளைமோர்த் தாக்குதலுடன் சிறு ஆயுதங்களால் புலிகள் தாக்குதல் நடத்தியதாக அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வவுனியா—மன்னார் வீதியில் படையினரின் தொடர் காவலரண்களுக்கு தெற்கேயுள்ள செட்டிக்குளம் பகுதியில் தாம் மேற்கொண்ட தாக்குதலில் 8 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

படையினர் சென்ற ஜீப் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும்—

காயமடைந்த மூவரில் இராணுவ மேஜர் அபயக்கோனும் ஒருவர் என்றும் "புலிகளின் குரல்" தெரிவித்தது.
(இ-3-9-21)

## பல்கலைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொம்பனித் தெரு பொலீஸ் நிலையத்துக்குச் சென்று பொலீஸ் அதிகாரிகளுடன் பேசியதைத் தொடர்ந்து அவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் என்பதை உறுதி செய்யும் கடிதங்கள் அவரிடம் இருந்த போதும், அவரைக் கைது செய்து தடுத்து வைத்திருந்தமை தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.
(இ-3)

## அத்தாஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

கலந்து கொண்டனர்.

விஞ்ஞான தொழில்நுட்பத்துறை அமைச்சர் பட்டி வீரக்கோனும் அதில்கலந்துகொண்டார்.

சம்பவம் குறித்து பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் — எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் பத்திரிகையாளர்கள் கோஷம் எழுப்பினர்.

யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய, யுக்திய ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த மனோரஞ்சன், லக்பிம ஆசிரியர் பந்துலபத்மகுமார, "திவயின" ஆசிரியர் உபாலி தென்னக்கோன் ஆகியோரும், லூசியன் ராஜகருணாநாயக்காவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் அடங்குவர். (இ ஐ)

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

பினர்களும் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்யவில்லை.

உள்ளூராட்சிச் சபைகளின் நிர்வாகங்களைக் கைப்பற்றியுள்ள கட்சிகள் தமது உறுப்பினர்கள் பதவி ஏற்க முன்னர் தமது உறுப்பினர்களுக்கு சரியான வசதிகளைச் செய்து தருமாறு அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

பிரதேச செயலர்களை ஆணையாளர்களை கொண்டு இயங்கும் இந்தச் சபைகளுக்கு போதிய நிதி, போதிய அதிகாரம் வழங்கப்பட்டபின்பே பதவி ஏற்க முடியும் என்று கட்சிகள் தெரிவிக்கின்றன.

தமது சபைகளில் கூட்டம் நடத்தக்கூட கட்டட வசதிகள் இல்லை என்று அவை தெரிவிக்கின்றன. (இ 3)

## விதவைகளுக்குச்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

பகுதியாகவும் அழிக்கப்பட்ட நிலையில் குடியமர்ந்துள்ள அவர்களுக்குக் கிடைக்குமானால் பேருதவியாக அமையும். அவர்களுக்குச் சேரவேண்டிய பணத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது ஊழியர்களோ வழங்கநடவடிக்கை எடுத்தால் என்ன? ஒரு வகையில் இது ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்.

த. பொன்னுராசா

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

## படையினரின் முகாம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் முகாம் வளவுக்குள் வீழ்ந்தன

2 விசேட அதிரடிப்படையினர் இதனால்காயமடைந்தனர்

அதே நேரம் கல்முனை மருதமுனையில் நேற்று முன்தினம் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரின் சடலம் செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊடாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. [இ-9-21]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org